REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—மார்கழி உ௩, 6-1-'46—ஞாயிறு | இதழ் 24

# புத்தாண்டிற் புனித முயற்சி?

## 1945 இலங்கைக்கு ஈந்த இன்னல்கள்

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து!' என்று சொல்லி 1945-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19-ந் திகதி ஈழகேசரி தனது வாசகர்களைக் குதூகலிக்கச் செய்தது. இத்தனைக்கும் ஒரு சந்தர்ப்பம் அளித்த 1945-ம் ஆண்டை வாழ்த்தத்தான் வேண்டும். லோகம் சுகம்பெறக்கடவது என்ற சுலோகத்தை உச்சரிக்க வைத்த ஆண்டல்லவா அது!

ஐந்து வருடகாலமாக உலகமக்களை ஆட்டிவைத்த இரண்டாவது மகாயுத்தம் அணுக்குண்டை வீசி மக்களை மாக்களாக்கிவிட்டு மற்றுமோர் கொடிய யுத்தத்திற்கு அடிகோலி விட்டுத் திரை மறைவிலே நாசவேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. சமாதானம் என்ற பேச்சு அடிபடுவதன்றி உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு எவ்வித சூசனைகளையுங் காண்பதற்கில்லை.

1945-ம் ஆண்டு பொதுவாக இலங்கைமக்களுக்குப் பலத்த இன்னல்களையும் ஏமாற்றங்களையும் தாராளமாகக் கொடுத்திருக்கின்றது. கமக்காரர்கள் பட்ட கஷ்டங்களைப் பூமாதேவி உணர்ந்திருந்தால் உணவுக் கஷ்டம் உச்சநிலையை அடைந்திருக்கமாட்டாது. சேர் ஒலிவர் குணத்திலகா ஆகாயக்கப்பலில் அவுஸ்திரேலியாவுக்குப் பறந்து சென்ற போதிலும் உணவுப் பங்கீடு விஷயத்தில் நிரந்தர நன்மைகள் ஏற்படவில்லை. கொள்ளை விலைக்குப் பொட்களை விற்றுப் பணஞ் சம்பாதித்து ருசிகாணும் எருமைமாடுகள் பருத்துக்கொண்டே வருகின்றன. ஐக்கிய பண்டகசாலைகளும் உணவுப் பகுதி உத்தியோகஸ்தர்களும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்த விடத்தும் மறைந்துபோன வருஷம் கிடைத்தபடியையும் அரைவாசியாக்கிவிட்டுப் போய்விட்டது. இதனால் அரைக்கொத்து அரிசி பெறுவதற்காக ஐக்கிய சங்கப் பண்டகசாலைகளில் ஒற்றைக்காலில் நின்று தவஞ் செய்யவேண்டிய பாக்கியங் கிடைத்திருக்கின்றது!

அரசியல் விஷயமாக இலங்கை 1945-ம் ஆண்டில் அநேகவிதமான குத்துக்கரணங்கள் போட்டிருக்கின்றது. ஜனவரி மாதம் 13-ந் திகதி சுதந்திர இலங்கை மசோதா முதன் முறையாக அரசாங்கசபையில் ஆரவாரத்துடன் நிறைவேறியது. மூன்றும் முறையாக அம்மசோதா அதேமாதம் 22-ந் திகதி நிறைவேறிய விடத்தும் இன்று இலங்கை பிரிட்டனின் ஏகாதிபத்தியச் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு மூச்சுத் திணறுவதைக் கண்ணாரக் காண்கின்றோம். அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றோம்.

உச்சநிலையடைந்த வகுப்புவாததகராறுகளை நீக்கி, "வெள்ளைக்காரச் சுதந்திரம்" அளிப்பதற்கு வெள்ளைக்கூட்டம் ஒன்று ஜனவரி மாதம் 22-ந் திகதி கொழும்பு நகரமண்டபத்தில் தனது கபடநாடகத்தை ஆரம்பித்தது. இந்தக் கோஷ்டிக்குத்தான் ஸோல்பேரிப் பிரபு தலைமை தாங்கினார். அவர்கள் சீமை சென்று வாயுவேகத்தில் அனுப்பிய ஸோல்பெரி அறிக்கையை இலங்கைமக்கள் நெருப்புவெயிலில் வரிசையாக நின்று மண்டியிட்டு வாங்கினர். கவைக்கு முதவாத இந்த அறிக்கை இருட்டுச் சந்தையிற் பத்து ரூபாய்க்கும் கிடைக்கவில்லையாம்.

இந்த அறிக்கை 'ஐம்பதுக் கைம்பது' என்று வாதாடிய கூட்டத்தாருக்குப் பலத்த ஏமாற்றத்தை உண்டாக்கிவிட்டது. இதுகாரணமாக இந்தக் கோஷ்டிக்கு இப்போது ஏகாதிபத்தியம் என்றால் வேப்பெண்ணெய் மாதிரி இருக்கின்றது. இப்படியான ஒரு நிலையை ஏற்படுத்தியதற்காக ஸோல்பெரிக் கும்பலுக்கு இலங்கைமாதா நதி செலுத்துகின்றாள்.

சுதந்திர இலங்கை மசோதாவைச் சுமந்து சென்று இலங்கை அரசாங்கசபையில் அரங்கேற்றிய சிங்களமகாசபைத்தலைவர் ஸ்ரீ சேனநாயகாவின் மந்திரத்துக்குக் கட்டுண்டு இலங்கை மாதாவின் அடிமைச் சாசனத்துக்குக் கைச்சாத்திட்ட வைபவமும் 1945-ம் ஆண்டில் தான் நிகழ்ந்தது!

முதலாளிகளின் பிரதிநிதியாக விளங்கும் ஸ்ரீ சேனநாயகா ஸோல்பெரித்திட்டத்தை முத்தமிட்டு வரவேற்றதுமன்றி அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸின் தூண்களாக விளங்கிய ஸ்ரீமான்கள் தியாகராஜா, இராஜகுலேந்திரன், நடேசன் ஆதியோரை அடிபணியவுஞ் செய்தார். எனவே இலங்கையின் அரசியற் சரித்திரத்தில் வகுப்புவாதம் தலையடி பெற்றுச் சமாதியடைந்ததுங் கடந்த ஆண்டிற்றான். இதுகாரணமாக ஔவைப் பிராட்டியாரின் அருஞ்சொற்றொடரும் அரசாங்க சபையில் அற்புதமாக எடுத்தாளப்பட்டது. தமிழ்மொழிப்பண்பும் இந்தியக் கலாசாரமும் மிகவும் நிறைந்த ஸ்ரீ நடேசன், சமபல பிரதிநிதித்துவம் ஏகாதிபத்திய சாத்தான்களிடஞ் சவுக்கடி பெற்றதைக் கண்டதும் 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற முதுமொழியைப் போதித்துத் தனது சகாக்களுக்கு ஆறுதல் கூறிய வாசகம் அரசாங்கசபையில் இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அற்புதமான அதே பேச்சு அகில இலங்கைத் தமிழர் காங்கிரசுக்கு நாராசம் போலவுமிருக்கின்றது!

எனவே, இலங்கை சுதந்திரம் பெறவில்லையே என்ற துக்கம் இங்குள்ள எந்த அரசியற் கட்சிக்குங் கிடையவே கிடையாது. ஏகாதிபத்தியம் இலங்கையில் முன்னரிலும் பார்க்க அதிகமாக வேரூன்றியிருப்பது தான் இப்போது கண்டமிச்சம்.

அரசியற் சீர்கேடுகள் ஒருபுறமிருக்கக் கல்விமந்திரி கன்னங்கராவின் இலவசக் கல்வித் திட்டம் இலங்கையைக் கலக்கு கலக்கென்று கலக்கிக் கொண்டிருக்கின்றது. ஏகாதிபத்தியக் கோட்டைக்கு அஸ்திவாரமிட்ட மிஷனரிக்கூட்டமும், சார்ந்தஉரிமைகளை அனுபவித்துக் கொண்டு வரும் பணக்காரக் கும்பலும் இலவசக் கல்வியை 1946-ம் ஆண்டிலும் எதிர்த்துக்கொண்டேயிருக்கின்றன. "சுற்றி நில்லாதே போ பகையே, துள்ளி வருகுதுவேல்" என்று சொல்லிக்கொண்டு, கல்விமந்திரி வித்தியாதானத்தைச் சகலருக்கும் அளித்துக் கொண்டேயிருக்கின்றார். ஆரம்பத்தில் இலவசக்கல்வித் திட்டமும் போதனு முறைகளும் பெரிய இழுபறிகளை உண்டுபண்ணுவதாயினும் இந்த இலவசக் கல்வித் திட்டம் இலங்கை மக்களுக்கு நிரந்தர நன்மைகளைக் கொடுக்குமென்றே கூறவேண்டும்.

கடந்த வருடத்தில் பயனற்ற வேலைநிறுத்தங்கள் பல தலைகாட்டித் தொழிலாளர்களுக்கிடையே தடுமாற்றங்களையும் உண்டுபண்ணின. இத்தகைய வேலைநிறுத்தங்களுக்குக் காரணமாக விருந்த மொஸ்கோ பூசாரிகளை நிதானமான உலகங் கண்டித்தது. தொழிலாளர்களின் நன்மைகளை விரும்பும் பல தலைவர்கள் இலங்கைக்கு வேண்டுமென்ற தூய எண்ணம் கடந்த ஆண்டிற் சகல தொழிலாளர்களின் உள்ளங்களிலும் எழுந்திருப்பது நூதனமன்று.

வகுப்புவாதத்துக்கிரையாகிக் கொண்டு வந்த யாழ்ப்பாணத்தில் இருபது ஆண்டுகட்குப் பின், 'சுதந்திரம்' 'தேசீயம்' என்ற பரிசுத்தமான பதங்களும் 1945-ம் ஆண்டின் பிற்கூற்றில் அடிபட ஆரம்பித் திருக்கின்றன. இது வரவேற்கத் தக்கது. இத்துறையில் உழைக்கும் இலங்கைத் தேசீயத் தமிழர் சபையை இலங்கை மக்கள் ஆதரிக்க வேண்டும். கல்விக் கழகங்களுக்கு இருப்பிடமாக மிளிரும் யாழ்ப்பாணத்தில் 84 ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் உள்ளிட்ட இன்னும் பல கல்விக்கழகங்களை வித்தியாசாலைகள் இலவசக் கல்வித் திட்டத்தைத் தழுவிப் பிடித்துக் கொண்டன.

இன்று இலங்கை புத்தாண்டின் தலைவாசலில் நிற்கின்றது. 1947-ம் ஆண்டிற்றான் புதிய அரசியற்றிட்டம் நடைமுறையில் வரும். 1946-ம் ஆண்டில் தொகுதி நிர்ணயசபை தனது வேலையை ஆரம்பித்து இலங்கையைத் 96 தொகுதிகளாகப் பிரிக்கப் போகின்றது. பொருளாதாரவிஷயமாக நமதுநாடு 1946ம் ஆண்டில் சீர்பெறுமென நம்பலாம். கட்டுப்பாடுகளும் அவசரமற்ற சட்ட திட்டங்களும் மறைந்து கொண்டே போகும். அப்படியானால் இலங்கை சுதந்திரம் பெறப்போகின்றதென ஈழகேசரி வாசகர்கள் கருதவேண்டியதில்லை!

இனி உலகத்தைப் பற்றிக் கூறுவதாகில் அணு அளவு கூறுதல் போதும். 1945-க் கிழவன் 1946-ச் சிசுவிடம் பெரிய அணுக்குண்டு ஒன்றைத் தூக்கிச் சுமத்திவிட்டுச் சென்றிருக்கின்றான். குழந்தையுங் குண்டும் செய்யவிருக்கின்ற கூத்துகளையுந் திருகுதாளங்களையும் இருந்து பார்க்கலாமல்லவா?

வாழ்த்துகின்றோம் ... ...

தைப்பொங்கல் எங்கள் அபிமானிகளுக்கும் அன்பர்களுக்குஞ் சகல இன்பங்களையும் நல்கவேண்டும் என நல்வாழ்த்துக் கூறுகின்றோம்.

தனலக்குமி புத்தகசாலை
— சுன்னுகம் —
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீட்டு விநியோக உரிமையாளர்.

## பொங்குக பொங்கல்



JAFFNA COLLEGE LIBRARY
JAN 7 1946
VADDUKODDAI, CEYLON.

— பண்டிதர் நா. கந்தையா —

பொங்குக தைத்திருப் பொங்கல் — எங்கும்
பொங்குக மங்களம் பொங்குக இன்பம்.

மங்கையர் செங்கைக ளாலே — தங்கள்
மனைகளைக் கோலமிட் டழகுறச் செய்தே
மங்கலப் பூரண கும்பம் — தத்தம்
மனைவாசல் வைத்துன்வை வரவேற்றே நிற்பார். 1

சிறுவர்கள் பட்டாசு சுட்டே — தம்
சிந்தை களிப்புற்றே ஆட்டங்கள் செய்ய
அறுசுவை உண்டி வகைகள் — அன்னை
அன்புடன் செய்திடப் பொங்குக பொங்கல் 2

கதிரவன் வடதிசை நோக்கி — வருங்
காலமிஃ தென்றே களிப்புடன் மாந்தர்
புதியநற் பானையிற் பால்பெய் — நீடுப்பிற்
பொலிவுற வைத்திடப் பொங்குக பொங்கல் 3

சிற்றுண்டி வகையுடன் பழங்கள் — வைத்தே
சிறப்புடன் பூசனை செய்தே மகிழ்ந்து
உற்று ருறவின ரோடே — உண்டு
உறவாடிக் களிப்புறப் பொங்குக பொங்கல். 4

நாட்டிற் பிணிதுயர் நீங்க — யாரும்
நாடிடுஞ் செல்வ வளன்சிறந் தோங்க
வீட்டி லறம்நிலை நிற்க — என்றே
வீறுற் றெழுந்துமே பொங்குக பொங்கல். 5

அன்பெனும் ஊற்றுச் சுரப்பப் — பெரும்
அருள்வெள்ளம் கரைபுரண் டவனியிற் பாய
வன்பான செயலெல்லாம் மாய — இன்ப
வாழ்வைப் பெறவேன்றே பொங்குக பொங்கல் 6

தேசுடைக் கல்வி சிறக்க — நாட்டில்
ஓர்ந்தமிழ்த் தென்றல திசைதோறும் வீச
மாசறும் வேள்விகள் மல்க — என்றும்
மழைவளமே மாங்கிடப் பொங்குக பொங்கல். 7

உலகப் பெரும்போரி னாலே — நாமும்
உற்ற துயர்க ளொழிந்திட வென்றும்
பலவகைப் பொருள்களை யெளிதே — பெற்றுப்
பயன்பெறு வோமெனப் பொங்குக பொங்கல் 8

சிங்களர் தமிழர்க ளென்றும் — நாட்டிற்
சிறியவர் பெரியவர் அயலவர் என்றும்
எங்களிற் பேதங்கள் நீங்க — நாம்
எல்லோருஞ் சமனெனப் பொங்குக பொங்கல். 9

அன்னிய ராட்சியுட் பட்டே — நாங்கள்
அடிமைக ளாகாமல் விடுதலை யடைவோம்
மன்னிய உரிமைகள் பெற்றே — என்றும்
வாழ்ந்திடு வோமெனப் பொங்குக பொங்கல். 10

நேச மனப்பான்மை கொண்டே — நெறி
நின்றே பணிசெய்யத் தொண்டர்க ளெல்லாம்
தேச விடுதலை கண்டே — எங்கள்
சிந்தை களிப்புறப் பொங்குக பொங்கல். 11

அன்பர்கள் எல்லோர்க்கும் அன்றி — தேச
அடியார்க ளெல்லோர்க்கும் மங்கள மாக
இன்புடன் தைப்பொங்கற் திருநாள் — இன்றே
எல்லோர்க்கும் மங்களங் கூறிநிற் போமே. 12

ஈழகேசரி வாழ்த்து!

வாசக நேயர்களுக்கும், விளம்பர கர்த்தாக்களுக்கும், விற்பனை உரிமையாளர்களுக்கும் ஈழகேசரியின் உளப்பூர்வமான பொங்கல் வாழ்த்துக்கள்

## இலங்கைச் சகோதரர் சங்கம்

இச்சங்க மூன்றுவது வருடமகாநாடு நேற்று (5-1-1946) சனிக்கிழமை ஊர்வலத்துடன யாழ்ப்பாண நகரமண்டபத்தில் வழக்கறிஞர் திரு தருமகுலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு லெஸ்லி எஸ். குணவர்த்தன, நியாயவாதி திரு. எஸ் ஏஜ். பேரின்பநாயகம் (பி. ஏ.) செல்வி எம். வி. ஏற்சின்ஸ் அம்மையார் (எம். ஏ.), "தினகரன்" ஆசிரியர் திரு. எம் சுப்பையா, "ஈழகேசரி" ஆசிரியா திரு. என். பொன்னையா என்போராலும் இன்னும் அறிஞர் பலராலும் உபந்நியாசங்கள் செய்யப்

# பொங்கற் பட்டாசு

—— சோனாசலம் ——

**ஒருவருடத்தில்உள்ள அத்** தனை நாட்களுமே—அவை 365 ஆக இருந்தாலுஞ்சரி 366 ஆக இருந்தாலுஞ் சரியே—நல்லநாட்கள்தான் என்பது எனது அபிப்பிராயம். இதனால், நான், நேயர்களுக்குப் புதுவருட வாழ்த்துக்கூறவேண்டியது அவசியமில்லை என்பதுநன்குதெளிவாகிறது. இருந்தபோதிலும், பலரது விருப்பத்தை ஒட்டி, வருஷத்திலுள்ள அத்தனை நாட்களும் வெற்றிகரமான நாட்களாக இருக்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகிறேன். வாழ்த்துக் கூறுவதென்கிற வழக்கத்தை வைத்துக்கொண்டால்—என்னைப் பொறுத்தவரையில்—ஒரு மனிதனுக்கு வேறு வேலையே இருக்கக்கூடாதென்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயம். தினமும்—ஒவ்வொரு கணமும் வாழ்த்துக் கூறிக்கொண்டேயிருக்க வேண்டும்; மனிதர்க்கு மாத்திரமல்ல, இறைவனுக்கும் சேர்த்துத்தான்.

**பெரும்பான்மையான ஜன**ங்களின் அபிப்பிராயத்தை ஒட்டி, அதாவது ஜனநாயகத்துக்கு ஏற்றபடி—கீரிமலைக் கேணியை சீர்திருத்தி அமைக்கவேண்டும். அன்று ஒருநாள் நான் கீரிமலைக்குப் போயிருந்தபோது, இப்போதுள்ள கேணியைப்பற்றிப்பலர்குறை கூறினார்கள். 'நீந்துவதற்கு சௌகரியமில்லை' என்பதுதான் அவர்கள் கூறிய குறையின் சாரம். கேணியை இன்னும் ஆழமாக்கி, கற்பாறைகளையும் ஒழுங்காக உடைத்துச் சமப்படுத்திவிட்டால் கீரிமலைக் கேணி புனல் விளையாட்டுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும் என்று பேசிக்கொண்டார்கள், மேலேயிருந்துகுதிப்பதற்கு ஏற்றபடி உயரமான ஒரு மேடையை கேணியின் பக்கத்தில் அமைக்கவேண்டும். நீர் எப்போதும் ஒரு மட்டமாக இருக்கத்தக்கதாக ஒழுங்கு செய்யவேண்டும்; என்றெல்லாம் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இதை யார் கவனிக்கப்போகிறார்கள்!

**மக்கள் மனதில் சுதந்திர** தாகத்தைஊற்றெடுக்கச்செய்வதுதான் இப்போது பிரதானமெனக் கருதி, இலங்கைக்கொடி விஷயமாகப் பலத்த விவாதம் நடைபெறுகிறது. இந்த விவாதங்களைப் பார்க்கும்போது எனக்கும் ஒரு யோசனை உதிக்கிறது. அதாவது, இலங்கையின் தேசியக்கொடியாக, சுத்தமான வெள்ளைச் சீலையை, அதில் ஒன்றையுமே குறிப்பிடாமல், உயரத்திற் பறக்கவிடவேண்டுமென்பதுதான். வெள்ளை வேஷ்டி கட்டுகிறவர்கள் எல்லோரும் இதை வரவேற்கலாம். ஆனால், நல்ல நல்ல, விதம்விதமான வர்ணச் சேலைகளை விரும்பும் இலங்கை மாதாவின் புதல்விகள் இதை ஒப்புக்கொள்வார்களா? அவர்களுக்குச் சுதந்திரம் வேண்டாமா? அவர்களது அபிப்பிராயத்துக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டியது இந்தக் கலியுக நவயுகத்தில் அவசியமே அல்லவா? ஆனால் கணவனை இழந்த விதவைகள் எல்லோரும் வெள்ளைக்கொடி யோசனையை அங்கீகரிப்பார்கள் என்பதிலே சந்தேகமில்லை. ஏனெனில் அவர்களும் வெள்ளைச் சேலை அணிபவர்கள் தாமே! பெரும்பாலார் அபிப்பிராயத்துக்கிசைய வெள்ளைக் கொடியைத் தேசியக் கொடியாக்கலாமென்பதில் இனி ஆட்சேபனை என்ன?

**கல்வி மந்திரியாரின் மத்**திய பாடசாலைகள், நாட்டிற்கல்வி விருத்தியையும் கலை விருத்தியையும் அதிகரித்தாலென்ன, அதிகரிக்காவிட்டாலென்ன, ஹாஸ்ய விருத்திக்கு ஆரம்பத்திலிருந்தே மிகவும் ஒத்தாசை செய்கின்றன என்பதில்மாத்திரம்சந்தேகம்கொள்ள ஏதுவில்லை. ஒரு ஆசிரியரை மத்திய பாடசாலை ஒன்றுக்குத் தலைமையாசிரியராக நியமித்து, பாடசாலைக்குப் போய் வேலையை ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவுபோயிற்றாம். ஆசிரியர் குறித்த மத்திய பாடசாலை இருப்பதாகக் கூறப்பட்ட இடத்துக்குப் போய் நின்றுகொண்டு நாலுபுறமும் பார்த்தாராம். மத்தியபாடசாலை என்றால் என்ன? என்றதைப் பற்றிய வரைவிலக்கணம் அவர் மனதில் எப்படியிருந்ததோ நான் அறியேன். ஆனால் அவர், மத்தியபாடசாலை இங்கே இல்லையே? என்று அதிகாரிகட்கு தந்தி அடித்தாராம்! ஒரு நாட்டின் மனோவளர்ச்சிக்கும் தேகவளர்ச்சிக்கும் ஹாஸ்ய உணர்ச்சி மெத்த ஒத்தாசை செய்யுமென்பது மெய்யானால், மத்திய பாடசாலைகளை எல்லோரும் வரவேற்கத்தான்வேண்டும்.

**ஹாஸ்ய உணர்ச்சி, அந்**தக்காலத்திலே 'நக்கீர'ருக்கு இருந்திருக்குமானால், சிவபெருமானின் நெற்றிக் கண்ணுக்கு அவர் இலக்காகி அவதிப்பட்டிருக்கமாட்டார். 'கீர்கீர் எனவறுக்கும் கீரனோ என் கவியை, ஆராயுமுள்ளத்தவன்' என்று அந்த முக்கண்ணன் கூறியபோது, நக்கீரர், 'கீர்கீர் என்று அறுப்பதா, வறுப்பதா மரபு' என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பாரேயானால் 'பக்'கென்று சிரித்திருப்பார். இருபக்கத்திலும் கோபம் பறந்துபோக சமாதானம் நிலவியிருக்கும், ஆனால் அது 'நக்கீர'ருடைய பிழையா? அந்தக்காலத்திலே மத்தியபாடசாலைகள் இல்லாமலிருந்ததுக்கு அவரா பொறுப்பு?

உங்கள் இடங்களின் மங்கள சூரியன்

# மெய்கண்டான்

## திருக்குறட் கலண்டர்

['உதயசூரிய' அடையாளங் கொண்டது.]

"கல்லார்க்கும் நல்லார்க்கும் கல்லூரி வல்லார்க்கும் எல்லார்க்கும் ஏற்கும் இது"

கொழும்பில் 79, பார்பர்வீதியிலுள்ள மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் டிசம்பர் 31-க்கு மேல் ஜனவரி 10-ந் தேதிக்குள் சில்லறைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

விலை: (10 × 15) கல்கத்தாப் படத்துடன் 1-க்கு ரூபா 2-50.

சிறிய படத்துடன் ,, ,, 2-25.

குறிப்பு: கலண்டர் 1-க்கு ரூபா 1-00 வீதம் முற்பணம் கொடுத்து உடன் பதிவு செய்விப்பவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

இப்பொழுதே கவனியுங்கள்! பிந்தினாற் கிடைப்பதரிது!!

## மெய்கண்டான் டெஸ்க் கலண்டர்

(இவ்வருடத்துப் புதிய அழகிய பதிப்பு)

இங்கிலிஸ், தமிழ், அரபு ஆகிய தேதிகளுடன் பூரணை, அமாவாசை, அட்டமி, கார்த்திகை, அரசாங்க-வங்கி விடுமுறை ஆகிய தினங்களைத் துலக்கிக் காட்டும் விசேஷ அடையாளங்கள் உள்ளது. 1-க்கு விலை சதம் 50

மொத்த விலைக்கும் மற்றும் விபரங்களுக்கும் எழுதவும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
மட்டுவில், சாவகச்சேரி.

புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு
## கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும்
— பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO
COMMERCIAL CO., LTD.
Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் முதன்மை நாதம்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இக்கால உலகம் எக்காட்சி வழங்குகிறது? இக்கால உலகம் செவ்விய பரபரப்புக்கும்-தீய கிளர்ச்சிக்கும் - இரத்தபுரட்சிக்கும் இரையாகி வருதல் கண்கூடு. மன்பதையின் நாட்டம், இகலிலும்-பகையிலும்-போரிலும்-கொலையிலும்-கொலைக் கருவியிலும் சென்று உழலல் வெள்ளிடைமலை. இந்நிலை மாறுதல் வேண்டுமென்று முழங்காத அறிஞர் இல்லை.

மாறுதற்குரிய வழி என்னை? வழிகள் பலவாறு கூறப்படுகின்றன. ஈண்டு ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமென்று தோன்றுகிறது. அவ்வொன்று எது? அஃது இசை. இசைவழி இக்காலக் கோர உலகைச் சீர் செய்தல் கூடும்.

மனிதன் குரங்கினின்றும் தோன்றியவன். அதனால் அவன் குரங்கியல்பினின்றும் இன்னும் முற்றும் விடுதலையடைந்தானில்லை. விடுதலைக்கென்று மனிதப் பிறவியிற் பகுத்தறிவு விளங்கியது. பகுத்தறிவால் மனிதன் தன்னைப் பணபடுத்தித் தெய்வநிலை எய்த உழைத்தல் வேணடும்.

உழைப்பால் தெய்வநிலை எய்தியவர் சிலர் உளர். அவர் சான்றோர் எனப்படுவர். அச்சான்றோர்வாயிலாக இயற்கை அன்னை தன கலைகளை விரித்தனள்.

கலைகள் பலதிறத்தன. அவைகளுள் விழுமியது இசைக் கலை. இக்கலை எல்லாக் கலைகளிலுங் கலந்தும் தனித்தும் இயங்கும் பெற்றி வாய்ந்தது. இதனால் இது விழுமியதாகிறது. இசைக்கலை இயங்குமிடத்திற் பிற கலைகளின் மணம் ஒரோவழியாதல் கமழாமற் போகாது. இத்தகைய இசைக்கலையை மற்றக் கலைகளின் உயிர்நாடி என்று சொல்வது தவருகாது.

மனிதன்பாலுள்ள குரங்கியல்பைச் செகுத்து, அவ்விடத்தில் தெய்வ இயல்பை அரும்பச் செய்யும ஆற்றல் கலைகளின் உயிர்நாடியாகிய இசைக்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறலாம இதற்குக் கண்ணன் குழலிசையும், ஆயர் குழலிசையும், பாணர் யாழிசையும் சான்று பகரும்.

ஓர் அழகிய பூம்பொழில்; அதிற் சில குரங்குகள் புகுந்தன. குரங்குச் சேட்டைகள் வாளா கிடக்குமோ? அவைகள் பொழிலைச் சூறையாடத் தொடங்கின. அந்நிலையிற் பொழிலின் ஒரு பாங்கர் ஒரு குயில் தனது இனிய குரலெடுத்துப் பாடியது. அப்பாடல் ஆண்டு உலவிய ஒரு மயிலைத் தன் கலாபம் விரித்து ஆடுமாறு உந்தியது. அப்பொழுது அப்பாங்கர் இரண்டு குரங்குகள் பாயந்து ஓடின. அவைகளின் ஓட்டம் திடீரெனத் தடைப்பட்டது. ஓட்டம் நடையாயிற்று; நடை மெலிந்தது. குரங்குகள் நின்றன; அசைவற நின்றன; கால்களை நீட்டிப்படுத்தன. அவைகளின் புலன்கள் ஒன்றின; சேட்டைகள் ஒடுங்கின; குரங்குகள் ஆடல் பாடலில் திளைத்தன. மற்றக் குரங்குகளும் ஆண்டுப போந்து அந்நிலை எய்தன. இக்காட்சி, சீத்தலைச் சாத்தனர், திருஞானசம்பந்தர் முதலிய தமிழ்ப்பாவாணர்க்கு விருந்தாயிற்று. அவ்விருந்து முதம இன்றும் அவர் தம் தமிழ்ப் பாக்களிற் புத்தம் புதிய தாய்த் தேங்கி நிற்கிறது. குரங்கின் குறும்புகளைத் தகர்த்து எறியும் ஆற்றல் வாய்ந்த இசைக் கலைக்கு, மனிதக் குரங்கின் குறும்புகளை நீருக்கும் வல்லமை இராதோ?

இசைக்கலை மன்பதையில் இன்னும் நன்முறையிற் படிந்து பரவவில்லை. அக்கலை ஒரோவழிப் படிந்து பரவியுள்ள[illegible]. அது செவ்வனே படிந்து பரவினல் மனிதனது குரங்கியல்பு மாயும்; அவன்பால் தெய்வச்சாந்த இயல்பு அரும்பும். இம்மாறுதல் நிகழ்த்த இயற்கை அன்னை வீறுகிருள்; கலைகள் விரைகின்றன; அவ்வீறும் இவ்விரைவும் ஒன்றிச் செயலிற் பரிணமிக்க மக்களின் பகுத்தறிவுத் துணை தேவை.

பகுத்தறிவு கிளர்ந்து மதர்க்கும் நாள் சேய்மையிலில்லை; அணிமையிலிருக்கிறது. இதனை உலக நிகழ்ச்சிகொண்டு ஊகித்துணரலாம். அணுக்குண்டும், வெஞ்சுடர்க் கதிரும், இன்ன பிறவும் மனிதனைப் பல வழியிலும் அலைத்து அலைத்து, அவனது பகுத்தறிவை நல்வழியிற் பயன்படுத்துமாறு கடவியே தீரும். அணுக்குண்டு முதலியன மனிதனது குரங்கியல்பைக்குலைதது. அவன்மாட்டுத் தெய்வ இயல்பை அரும்பச் செய்யத் தோன்றின என்று அறைதல் மிகையாகாது.

இக்கால உலகைப் பண்படுத்தப் பலதிற முயற்சிகள் எழுகின்றன. அம் முயற்சிகளுள் இசைக்கலைக்கு ஆக்கந்தேடுவது தலையாயதாயிருத்தல் வேண்டும். இல்லையேல் விளையத்தக்க பயன் விளையாது.

இசையின் முதன்மை எது; நாதம் என்று தத்துவர் கூறுவர். பலவகைத் தத்துவ உலகங்களெல்லாம் தோன்றுதற்கும், மீண்டும் அவை ஒடுங்குதற்கும் நிலைக்களனுயிருப்பது நாதம். நாதத்துக்குமேல் விளங்குவது தூய அறிவாகிய பரம். அப் பரத்தின் வழி நாதம் இயங்கும். நாதம் பரத்துக்கு அணித்தே திகழ்தலால், அது நாத பிரமமென்றும், சப்த பிரமமென்றும் வழங்கப்படுகிறது.

நாதத்தின் வண்ணம் என்னை? இசை இதனல், இசையின் முதன்மை நாதம் என்று சான்றோர் அருளிச் சென்றனர். 'நாதம் இசைமூலம்' என்பதை யோக நூல்களிலுங் காணலாம்; முயன்ருல் அநுபவத்திலும் உணரலாம்.

நாதத்துக்கு மொழியுண்டோ? இல்லை. நாதம் இசை வண்ணமாய் முழங்குகிறது. அம் முழக்கம் மொழி கடந்த ஒன்று. மொழியற்ற நாதம், மனிதனது கருவி, கரணங்களை அரணுக்கொண்டு, தடித்துத் தடித்து, நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு பலப்பல மொழிகளாகிறது. இதைப் பற்றிய விரிவுரை ஈண்டைக்குவேண்டுவதில்லை. நாத-இசை மொழியற்றது என்பதொன்றே ஈண்டு உன்னத் தக்கது.

நுண்மை பருமை என்ருெரு வழக்கு உண்டு. நுண்மை தனது உண்மையைத் தனித்து உணர்த்தும் பான்மையதன்று. அது தனது உண்மையைப் பருமை வழியே வெளிப்படுத்தும் இயல்புடையது. அழகு நுண்மை. இஃது ஒருவர் வாயிலாகவே தனது இருப்பைத் தெரிவிக்கும். இவ்வாறே அறிவு, அன்பு, அறம், நீதி முதலிய நுண்மைகளும் ஒவ்வொரு பருமை மூலம் தன்தன் இருப்பைப் புலப்படுத்தும். நுண்மை பருமை என்பன உயிர் உடல் போன்றன.

இசை நுண்மை; உயிர். இதன் விளக்கத்துக்கு ஒரு பருமை உடல் தேவையன்ருே? அப் பருமை உடலே மொழி என்பது. மொழி எனில் எம்மொழி? அவ் வந்நாட்டில் இயற்கையாயமைந்துள்ள தாய்மொழி என்க.

நாம் தமிழர். நாம் எம்மொழியில் இசையைப் பாடுதல் வேண்டும்? தமிழ் மொழியில் என்று சொல்லலும் வேண்டுமோ? தமிழனுக்குத் தமிழ்ப் பாட்டே சுவைக்கும், மற்ற மற்றவர்க்கு அவரவர் மொழிப் பாட்டே சுவைக்கும். இஃது இயற்கை. இசையில் மொழிப்போரை நுழைப்பது அநாகரிகம். பகைமையைப் போக்க எழுந்த ஒரு கலையினிடைப் பகைமையைப் புகுத்துவது அறியாமை.

பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடியைந்தது. அவர் தம் வாழ்க்கை, இயற்கைத் தமிழ் - இனிமை - உடையதாயிற்று. இயற்கைத் தமிழ் - இனிமை - அவர்தம் மொழியாயிற்று. தமிழ் என்ருல் என்ன? இனிமையன்ருே?

தமிழ் இனிமை; இசையும் இனிமை. இரண்டினிமையும் ஒன்றுபட்டால் எத்தகைய இன்பம் சுரக்கும்! தமிழிசையின் மாண்பு என்னே! தமிழர் திருவேதிரு.

தமிழிசை தொன்மைவாய்ந்தது; மிகத்தொன்மை வாய்ந்தது. அவ்விசை எந்நாளில் தோன்றியது-வளர்ந்தது-முதிர்ந்தது என்று அறுதியிட்டுக் கூறல் இயலவில்லை. அது சரித்திர காலத்தையும் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்தகாலத்தில், தமிழ் நாட்டவர் இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல படக் கிடக்கின்றன. தமிழர் கோயில்களும், மறைகளும், காவியங்களும், ஓவியங்களும், பிறவும் எடுத்துக் காட்டுகளாக இலங்குகின்றன. 'தமிழ்நாடே ஓர் இசை நிலையம்' என்று சுருங்கச் சொல்லலாம்,

தமிழ்நாடு கலைக்கூடமாய்ப் பொலிந்த காலமும் உண்டு. இது பண்டைப் பெருமை. தமிழ் நாடு இந்நாளில உற்றுள்ள நிலையை விரித்துக் கூற நாவெழவில்லை. பிற்காலத் தமிழ் நாடு பல கலைகளை இழந்தது; இசைக் கலைகளிற் பல கூறுகளை இழந்தது. பொல்லா விலங்குகளையும் வயப்படுத்த வல்ல யாழை இழந்தது. பலப்பல இழவுகளை நினைக்க நினைக்க அழுகை பெருகும் இங்கே அழுகை எற்றுக்கு? தமிழ்நாடு தனது பெரும் பெருஞ் செல்வங்களை இழந்துவிட்டது. இது பிற்காலத் தமிழ்மக்களின் கவலையீனத்தால் விளைந்தது. இந்நாளில்-இவ்வறிய நாளில்-கலைகளின் உயிர் நாடியாகிய இசைக் கலைக்கு ஆக்கந் தேடத் தமிழிசை இயக்கம் காணப்பட்டது. இது களிபேருவகையூட்டுகிறது. தமிழிசை இயக்கங் கண்டு, அதன் ஆக்கத்துக்கென்று ஓயாது உழைத்துவரும் ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியார், தென்காசி சிதம்பரநாத முதலியார், ஸேர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் உள்ளிட்ட தமிழ்ப் பெருமக்களுக்குத் தமிழ்நாடு கடமைப்படுவதாக. தமிழிசை இயக்கம் காலத்துக்கேற்றது. அஃது ஓங்கி வளர்க.

தமிழிசை இயக்கம் தோன்றியதும் நாட்டிடைத் தமிழிசை வேட்கை முறுகி எழுந்தது. எழுச்சி போற்றற் குரியதே. எழுந்த வேட்கை நேரிய முறையில் உருக்கொண்டு செயற்பட்டால் நலன் விளையும்.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே இசை மன்றங்கள் தோன்றியுள்ளன. இன்னும் பல மன்றங்கள் தோன்றலாம. தொகைப் பெருக்கம் மட்டும் போதாது; தொண்டுப் பெருக்கமும் வேண்டும். மன்றங்கள் வெறும் விளம்பரக் கூடங்களாதல் கூடாது. அவைகளில் ஆவேசம், வெறி, வகுப்புப் பிணக்கு, மொழிப் பூசல். கட்சிப் போர் முதலிய பேய்கள் நடம புரிதலாகாது. பேய்க் கூத்தால் இசை ஆக்கம் பெருது; வசையே ஆக்கம் பெறும.

சில மன்றங்கள் திங்கட்கொருமுறை விழித்து இசை விருந்துண்டு தூங்கிவிடுகின்றன; சில ஆண்டுக்கொருமுறை விழித்து விழாநிகழ்த்தி உறங்கிவிடுகின்றன; சில கும்பகர்ணனுக்குத் துணைபோகின்றன. சோம்பலொழிக; சுறுசுறுப்பு எழுக.

ஒவ்வொரு மன்றமும் இசைப் பயிற்சிப் பள்ளியாதல் விழுப்பம்; பிரசாரக் கழகமாதல் சிறப்பு; நூல் வெளியீட்டு நிலையமாதல் நல்லது மன்றச் சார்பிற் பந்தாட்டம் முதலியன நடைபெறலாம்; கலை ஆராய்ச்சிகள் நிகழலாம்; புதுமை காணவும் முயலலாம்.

நமது நாட்டிற் கலைகளை வளர்பபதற்கென்று காணப் பெற்ற நிலையங்கள் பலப்பல. அவைகளுட் சிறந்தது கோயில். கோயில் வெறுங் கட்டடமன்று. அது பல்கலைக் கூடம்; இசைக் கழகம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# வாய் இதழ் குவித்தான்......

"இலங்கையர்கோன்"

"மைந்தன் உனக்கு" என்ருர்; மாக்களி எய்தினேன்;
"தந்தை நான்" என்ற தருக்குடன் சென்று
"மைந்த! உன் தந்தை முகம் பார்," என்றேன்.
தேர்கிலன் யாதும்,
கைமலர் விரித்து கால்கள் உதைத்து,
வாய்இதழ் குவித்தான் தாய்முலை நோக்கி......

மைஇருளும் மாயோகி மனநிறைவும் குழைத்து
மயல் வரச் சமைத்த மாவிழிகள் காணு
"ஐய! என் காதல! உன் அப்பன் இதோ!" என்றேன்.
தேர்கிலன் யாதும்;
கைமலர் விரித்து கால்கள் உதைத்து,
வாய்இதழ் குவித்தான் தாய்முலை நோக்கி......

காடு மலை கான் யாறு கடல் எலாம் கடந்து
கார் ஏறி, ரயில் ஏறி கடுவிசையாய் வந்து
ஆடும் மனதுடன் "அமுத! பார்" என்றேன்
தேர்கிலன் யாதும்;
கைமலர் விரித்து கால்கள் உதைத்து
வாய்இதழ் குவித்தான் தாய்முலை நோக்கி......

சீனத்துப் பட்டாடை சீமை செய் பிளானல்,
வீனெலியாப் பவுடர் விதம் விதமாய் சோப் எலாம்,
வனமாய்க் குவித்து, "என் வர்ம! பார்" என்றேன்
தேர்கிலன் யாதும்;
கைமலர் விரித்து கால்கள் உதைத்து,
வாய்இதழ் குவித்தான் தாய்முலை நோக்கி......

"நூல் அநந்தம் ஆய்ந்தும், மகளிர் தோள்கள் பல தோய்ந்தும்,
நண்பர் அன்பு இனிமை தேர்ந்தும், கான வாரிதியில் ஆழ்ந்தும்,
நின்னை நிகர் இன்பம் நுகர்ந்திலேன் மைந்த" என்றேன்
தேர்கிலன் யாதும்;
கைமலர் விரித்து கால்கள் உதைத்து
வாய்இதழ் குவித்தான் தாய்முலை நோக்கி......

# 'தையூணிருக்கை'

பவன்

மலைநாடு. மழை பெய்து கொண்டிருக்கிறது. தினைப்புனங்களிலெல்லாம் பயிர் பச்சைப் பசேலென்றிருக்கிறது. கதிரும் பறிந்து முற்ற ஆரம்பித்துவிட்டது. மிருகம் பறவை முதலியவைகளினுலே பயிருக்கு அழிவு வாராதபடி பெலமாகக் காவல் காத்துவருகின்றனர் கொடிச்சியர் (மலைநாட்டுப் பெண்கள்). ஆனல் அவர்களுடைய கட்டுக் காவலெல்லாம் மந்திக்கு ஒரு பெருந்தடையாகத் தோன்றவில்லை. அதற்கு அருமையான துணையாய் ஏற்பட்டுள்ளது பாயுந் தொழிலன்றிப் பிறிதொன்றும் கல்லாத கடுவன். ஆதலினுலே அது துணிந்து சென்று முதலிலே பறிந்து முற்றின பெருங்கதிர்களைக் கொய்து கொண்டது. கொய்த பின்பு கொடிச்சியருடைய கையிலகப்படும்படி அவ்விடத்திலா நிற்கும்? கடுவனேடு கூடிக்கொண்டு மலையிலே மேலே தூரத்தே பாய்ந்தோடிப் போய்விடுகிறது. ஓடிப்போய் ஊருென்றும் வாராத இடமாய்ப் பார்த்து உட்கார்ந்து கொண்டு கடுவனேடு பகிர்ந்து உண்ண ஆரம்பிக்கின்றது. [illegible] சாமாயிருந்தாலும் எதையும் பக்குவப்படுத்தித்தானே அனுபவிக்க வேண்டும். வாழைப்பழத்தைத் தோலுரிக்காமலே வாயிற் போடுகிருேமா? ஆகவே, அவையும் தாம் கொண்டுவந்த கதிர்களை உள்ளங்கையில் நிறைய எடுத்துக் கசக்கித் தூய்மை செய்தபின்பே உண்ணுகின்றன. மழையில் நனைந்தபடியால் ஈரம் வடியும் மேனியையுடையனவாகிய அக்குரங்குகள் தோலிலே சுருக்கு விழுந்த கீழ்வாயும், வளைந்த கதுப்பும் நிறைந்து ஊதிப் பொருமும்படி தானியத்தை வாயில் இட்டுத் தின்றுகொண்டிருக்கும் கோலமானது புலவரொருவருடைய கண்ணுக்கு, நோன்புடையார் தைத்திங்கட் பிறப்பில் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்ணுதல் போலக் காட்சியளிக்கின்றது. இவ்வருணனையைப் பின்வரும் நற்றிணைச் செய்யுளடிகளிற் காணலாம்.

"கொடிச்சி காக்கு மடுக்கற் பைந்தினை
முந்துவிளைபெருங்குரல்கொண்டமந்தி
கல்லாக்கடுவனெடுநல்வ[illegible]யேறி
யங்கைநிறையஞெமிடி[illegible]காண்டுதன்
திரையணற்கொடுங்க[illegible]நிறையமுக்கி
வான்பெயனனைந்தபுறத்தநோன்பியர்
தையூணிருக்கையிற்ருேன்றும்......"

இச் செய்யுளின் உரையிலே, "தையூணிருக்கை" என்பது தைத்திங்கட்பிறப்பில் நீராடி அன்று ஆக்கப்படும்மாட்சிமைப்பட்ட உணவுண்ணவிருத்தல் என்றும், "நோன்பியர்" என்பது ஆடி முதலாக மார்கழியீருகக் கிடந்த ஆறு திங்களும் தேவர்க்கு இராப்பொழுதெனப் புராணங் கூறுதலுண்மையின், இரவு பிற்றையாமங் கொண்ட சிலபொழுதுண்ணுதிருக்கு நோன்பியர் என்றும் விரித்து விளக்கப்பட்டுள்ளன.

இவ்விதமான நோன்புகளைக் கொள்ளாமையினுற் போலும் பெரும்பாலோர் இக்காலத்திலே 'கூப்பனில்' அகப்படுவதையே மாட்சிமைப்படுத்தித் திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

தாம் தாம் எடுத்துக்கொண்ட நோன்பின் பயனைக் கருதினுேர் தைத்திங்கட் பிறப்பில் மாத்திரமன்றித் தைத்திங்கள் முழுவதும் வைகறையில் நீராடுதலும் உண்டு என்பதும், நீராடுதலும் தவம் என்பதும், தைந்நீராடுதல் மகளிர் தமக்குரித்தாக் கொண்டிருந்தனர் என்பதும், அவருள்ளும் கன்னியரே சிறப்பாய்ச் சிரத்தையொடு இதனைக் கடைப்பிடித்து வந்தனர் என்பதும் பழந்தமிழ் நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. "தை" என்பது பூசத்தின் பெயர். "தைப்பூசம்" விசேடமுடையது. தைப்பூச நீராடுதல் தேவாரத் திருப்பாசுரங்கள் சிலவற்றிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. தையூணிருக்கையை ஒட்டி இவையும் சிந்திக்கற் பாலனவேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிவித்தல்

பொங்கற் பண்டிகையை முன்னிட்டு அடுத்தவார [13-1-46] ஈழகேசரி இதழ் வெளிவராது.

— அதிபர்.


# ஈழகேசரி

சுன்னாகம்: பார்த். மார்கழி உடு


## 1946

சென்ற ஆறு வருடமாக மாபெருந் துயரில் மூழ்கியிருந்த உலகப் பொதுமக்களுக்கு இப் புதிய வருடம் பெரிய ஆறுதலோடு கூடியதாகும். பழைய விமரிசையோடு புதுவருடக் கொண்டாட்டம் எங்கும் நிகழ்ந்ததென்பாம். யுத்தம் முடிவடைந்ததென்பது சிறிது மனச்சாந்தியை யுண்டுபண்ணியதாயினும் பல்வேறு கஷ்டங்கள் பொதுமக்களை இன்னும் துன்புறுத்தியே நிற்கின்றன. அவை நாளடைவில் அற்றுப்போமென நிச்சயமாகக் கூறலாம். யுத்தத்தில் ஈடுபட்ட நாட்டினர் தத்தம் தொழில் முறைகளிற் பழையபடி நெருங்கியுழைக்க ஆரம்பித்தவுடன் பொருட் கஷ்டங்கள் நீங்காதிருக்கக் காரணமில்லை. அதன்பேருக அரசினர் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளும் சிறிதுசிறிதாக நீங்கிவிடும். இருட்டுச் சந்தையின் நடமாட்டமும் இவ்வருடம் முடியமுன் முற்ருகக் குன்றிவிடுமென்பாம்.

மேலும் இவ்வருடத்தில் அளவிறந்த மகத்தான சம்பவங்கள் நிகழவிருக்கின்றன. யுத்தம் முடிவடைந்ததேயன்றிச் சர்வதேச சமாதான மகாநாடு இன்னும் நடந்தெய்தவில்லை. அம்மகாநாடு அடுத்த சித்திரை மாதமளவில் நடைபெறுமென அறிகின்ருேம். அதன்முடிவிலிருந்தே ஐரோப்பிய நாடுகளதும், யப்பானியரதும் அரசுரிமையின் எல்லை அறியலாகும். இம்மகாநாடு இலகுவில் முடிவெய்துமெனக் கூறவியலாது. எத்தனையோ தகராறுகள் இதையிட்டு ஆரம்பிக்குமென்பது வெளிப்படை. வல்லரசினராகும் ருஷியர் வேண்டிநிற்கும் கோரிக்கைகள் ஐக்கிய வல்லரசினரைப் பெரிதும் மலைப்படையச் செய்து விட்டனவென்பாம். எனினும் மற்றைய அரசினர் நிதானத்தை மேற்கொண்டு நிற்பின் சித்தி எய்தாது போகுமா? இன்னும் உலகததிலுள்ள சிறு சாதியினரை அடக்கவேண்டுமென எண்ணின், நிரந்தரமான சமாதானம் ஏற்படுவது அபூர்வம். மற்றையோரின் உரிமைகளையும் மதித்து நடுநிலைமை வகிப்பின் உலகப் புரட்சிகள் ஏற்படாவே நிற்க,

இலங்கையின் முற்போக்கும் இவ்வருடத்தில் மிக்க உறுதிப்பாட்டினை அடைவது அவசியமாகின்றது. அரசியற் சுதந்திரங்கள் பெறுவது நிச்சயமாய் விட்டதாயினும் அதனை ஏற்ற முறையிற் ருெழிற்படச் செய்தற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன. எல்லா வகுப்பினரும் ஒற்றுமையடைந்து நன்ருேக்கத்துடன் உழைப்பின் பெருநன்மையை நம்நாடு அடைவது நூதனமல்ல. பொருளாதார நிலையில் இலங்கைத்தேசம் உறுதியடைதற்கும் இவ்வருடத்தில் அடிப்படையான வேலைகள் அநேகம் செய்யப்பட வேண்டும். பல தொழில் ஸ்தாபனங்களை அரசினர் நிறுவுவதற்குத் திட்டங்கள் வகுத்துள்ளார். அவைகளுட் சில ஆரம்பமாகி வேலைகளும்நடைபெறுகின்றன. சில இன்னும் அநுட்டானத்துக்கு வாராதிருக்கின்றன. இவைகள்யாவும் இவ்வருடத்தில் உறுதியான நிலைபேற்றினை அடைந்தாற்ருன் அடுத்துவரும் கஷ்ட காலங்களில் தளர்ச்சி யடையாமல் அவைகள் நிலைபெறவியலும். இத்துறையில் இந்தியா முதலிய விடங்களில் பெருமுயற்சி கையாளப்படுவதை நாம்மறக்கக் கூடாது.

ஐரோப்பியரின் ஆதிக்கத்திலுள்ள இந்தியா முதலிய கீழைத்தேச நாடுகளின் சரித்திரத்திலும் புதுவருடம் மிக்க மாறுதலைக் கொண்டு வருமென்பது திடமாகின்றது. என்றும் இந்தியர் அடிமைத்தனத்தில் இருப்பதென்பது அசம்பாவிதம். எப்படியாயினும் இந்தியா பெரிய அரசியலுரிமையை இவ்வருடத்திற் பெறுமென்பது பலர் கருத்து. இந்தியாவில் நடக்கும சம்பவங்களையும் இந்திய மக்களின் மனத்தின்கண் உதித்த அடக்குதற்கரிய சுதந்திரதாகத்தையும் நோக்குமிடத்து இனிச் சிறிதுங் காலந் தாழ்க்காது சுதந்திரம் வந்தெய்தாதிருக்க முடியாது. இவ்வுணர்ச்சியைப் பிரிட்டிஷ் தேசாளுமன்றத்தினர் நன்கு உணர்ந்துவிட்டனர். எப்படியாயினும் இந்தியாவில் நெடுநாட்களாக தாமனுபவித்து வந்த அரிய சுகங்களை நினைத்து நினைத்து இந்தியா சுதந்திரமடையும் நாளைப் பின்போடவும் எண்ணுகின்றனர். ஆனல் இவ்வெண்ணங் கைகூட இடமில்லை யென்பாம். பிரிட்டிஷார் தமது கௌரவத்துக்கும் உண்மை நிலைக்கும் பங்கத்தை யுண்டு பண்ணுது முழுமனத்துடன் இந்தியாவுக்கு விடுதலையளிப்பாராக.

இவ்வாறே மற்றைய கீழைத்தேச நாடுகளும் சுயாட்சியைப் பெறும் விஷயத்தில் வல்லரசினர் வேண்டிய ஒத்தாசை புரிவாராக. ஜாவா முதலிய கீழ் இந்திய தீவுகளிற் பிரிட்டிஷார் கையாளும் முறைகள் பெரிதும் ஆட்சேபத்துக்கிடமாக விருக்கின்றன. பிரான்ஸியர் ஒல்லாந்தர் முதலிய ஐரோப்பிய அரசினர் ஆசியா தேசங்களில் தமது ஆதிக்கத்தை நிரந்தரமாக நாட்ட பிரிட்டிஷார் ஏன் உதவிபுரியவேண்டுமோ? இந்தியா இலங்கை முதலிய நாடுகளையும் அப்படி வைத்திருக்க பிரிட்டிஷார் எண்ணுவிடின் மேற்படி நாடுகட்கு ஒத்தாசை புரிய ஒருப்படுவாரா? உலக சமாதானத்தை நிறுவுதற்கு அடிப்படையாகக் கைக்கொள்ள வேண்டிய முறையாதென்பதை இன்னும் மேலைத்தேச வல்லரசினர் நன்குணர்கின்ருரில்லை. எல்லாநாடுகளும் அந்நாட்டு மக்களால் அரசுபுரியப்படுவதாயின் உலகில் யுத்தம் ஆரம்பிக்கச் சிறிதும் இடமில்லையே. யாவர்க்கும் சுதந்திரத்தை வழங்கிப் பலங் குறைந்த நாடுகளை வல்லரசினர் பாதுகாத்துவரின் எவ்வளவு நன்மையாகும். பிறநாட்டினரின் செல்வத்தைத் தாம் கவரவேண்டுமென்ற வாஞ்சையினலே ஐரோப்பிய வல்லரசினர்க்கிடையிற் போட்டியும், அதன் பேருக மகாயுத்தமும் ஆரம்பித்து விடுகின்றன. இந்தப் புதுவருடம் இவ்வித தீமைகட்கு எல்லையை வகுப்பின் அதுவே பெருநன்மையாகும்.

### "மகாத்மாஜி ஆண்டவனின் தூதர்"

புதிய உலக அமைப்பை நிறுவ அனுப்பப்பட்ட ஆண்டவனின் தூதராக காந்திஜி விளங்குகிருர். உலக சமாதானத்திற் சிரத்தையுள்ளவர்கள் அவரை நாட வேண்டும் என்று லண்டனிலுள்ள காந்திசங்கத்தலைவர் பேராசிரியர் ஜி. எஸ். தாரா தமது புதுவருடச் செய்தியிம் கூறுகிருர்.

மேலும் அவர் கூறுவதாவது: அணுக்குண்டுசகாப்தத்தில் மனிதவர்க்கத்தின் தலைவிதி, சமாதானமாகப் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் தீர்க்கப்பட வேண்டுமானல் காந்திஜியின் தத்துவமான அஹிம்சை, சத்தியம் முதலியவற்றின் மூலம்தான் சாத்தியம்.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

### 'பால் பொங்கிற்ரு?'

என்று அடுத்த வாரம் நாங்கள் எங்கள் அயலவர்களைக் கேட்கப் போகின்ருேம். தைப்பொங்கல் காலங்களில் இப்படிக் கேட்டு அன்புப்பால் சொரிகின்ருேம். கடந்த வருடம் இதே மாதிரி நான் எழுதியபோது யாழ்ப்பாணத்திலும்அயற்கிராமங்களிலும் வைசூரிநோய் பரவியிருந்தபடியால் அனைவரும் மேற் கையையுங் கீழ்க் கையையும் மாறி மாறிப் பார்த்தார்களாம்!

இவ்வாண்டும் அதே போலத் தெமட்டக்கொடைப் பகுதியில் வாழும் மக்கள் கைகளைப் பார்ப்பார்கள். ஆமாம், அவ்விடத்தில் அம்மைநோய் ஏற்பட்டதோ இல்லையோ கொழும்பிலுள்ள சேரிப்பகுதிகளிலும் அநேகருக்கு அம்மைநோய் கண்டிருக்கின்றது. இதனல் அங்கு நூற்றுக்கு அதிகமானேர் இவ் வியாதியாற் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்.

அரைப்படி யரிசி வாரம் ஒன்றுக்கு எந்த மூலைக்கு? இந்த அழகில் "பொங்கலோ பொங்கல்'! என்று சும்மா சொல்லி அடிவயிற்றைத் தடவவேண்டியதுதான்!!!

### * * * * மாறுமலர்ச்சிக் கோலம் * * * *

இது மார்கழித் திங்கள். மனைகள் தோறும் கோலமிடுங்காலம் முற்றங்களிலேயுங் கோலம். இது இந்துசாதனங்களுள் ஒன்று. ஏதோ ஒரு அலங்கோலத்தை விளக்குமாறு எழுந்தது இங்குள்ள ஒரு 'திரு'த்தாள். இலக்கண வழுவிலாப் புணர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ள அந்த இதழாசிரியனின் கண்களுக்குச் சந்தி வழுவுள்ள தொடர் புகளும் இப்போது சிக்குப்படுகின்றன. 'லோகோ பின்ன ருசி' என்பதை உணர்ந்தார் இவ்வலங்கோலத்தை விளக்குமாறு வரமாட்டார். 'சூரிய ஸ்நானம்' செய்வோர் காட்சி ஒரு சிலருக்குக் கண்ணராவி...தான். சிலருக்கு அப்படியல்ல. 'அருச்சுனன் றவநிலைச் சருக்கம்' ஒரு சிலருக்கு அலங்கோலமாகத்தோற்றுகிறது. 'அருச்சுனன் தவநிலைச் சருக்கம்' என்ருல் குடிமூழ்கிப் போய்விடுமா, என்ன? காலம் மாறுகிறது. எனவே, வழுவற்ற புணர்ச்சியினை நன்கறிந்த ஆசிரியரும், அம்பலக்காரர்களும் பத்திரிகை உலகிற் சஞ்சரிக்கும் பிரகிருதிகள்தான். இவர்களுக்கு நயவஞ்சகக் கூட்டமொன்றும் பக்கபலம் என்ருல் நாவலந்தீவையும், நாவலர் பிறந்த நாட்டையும் நல்லூர்க் கந்தன் தான் காப்பாற்ற வேண்டும்!

இதுகாறும் கூறியவற்ருன் 'உலகம் பலவிதம் என்பதூஉம்' நுளம்படித்தான், 'கொப்பி' அடித்தான் என்பதூஉம் ஏனைய பிறவும் சொல்லாதே போதரும்.

### சந்தியில் 'இந்து'

சைவ இளைஞர் மத்திய மகா சபையின் வருடாந்தக் கூட்டம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் இன்று நடைபெறுகின்றது. அகில இலங்கை இந்து மகாசபைக்கும் சைவ இளைஞர் மத்திய மகாசபைக்கும் ஏதும் தொடர்புகள் உண்டா? சில வருடங்களுக்கு முன் இந்துமகாசபை ஒன்றில் 'இந்து படாத பாடு பட்டது.' பின்னர் சைவமாக மாறியது. இந்த 'இந்து' என்றபதம் எக்காலத்தது? பழைய இலக்கணங்களில் இச்சொல்லுண்டா? இல்லையேல் இஃது என்ன வழு? கலைமலைவா? ஆகம மலைவா? மறுமலர்ச்சியில் நம்பிக்கையுள்ளவர்களும் இச் 'சர்ச்சை'யிற் பங்குபெறலாமெனக் கருதுகின்றேன்? வித்துவான் பண்டிதர்களுக்கும் கட்டுப்பாடில்லை.

### 1946-ல் வேண்டாமா?

இலங்கை 'ரயில்வே'களிற் பிரயாணஞ் செய்பவர்கள் வண்டித் தொடர்புகளில் 'Grow more Food in 1945' என ஆங்கிலத்தில் அழகாக எழுதியிருப்பதைக் காண்பார்கள். 1945-ம் ஆண்டில் 'அதிக உணவு பயிரிடுக' என்று செந்தமிழிற் சொல்லலாம். அன்ருெரு நாள் 'நீராவித் தொடர்ப் பண்டியிற்' சென்றபோது சிறுவன் ஒருவன், "அப்பா, அதைப் படித்துப்பாருங்கள்; அப்படியானுல் 1946-ல் அதிக உணவு பயிரிட வேண்டாமா?" என்று தகப்பனுரைத் தட்டிக் கேட்டான். பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். படித்துவிட்டுச் சிறுவனின் நகைச்சுவையை ரசித்தேன். உயர்தர நகைச்சுவையறியாத பிரகிருதிகள் இச் சிறுவனிடஞ் சென்று பாடங்கேட்கவேண்டும்!

### ஹாஸ்ய சர்வாதிகாரி

நகைச்சுவையறியாத நண்பர்களைப்பற்றிப் பேசும்போது மேற்றிசைக் கலைஞன் பேர்னுட் ஷோ அவர்களின் குத்தல், கிண்டற் பேச்சுகள் நினைவுக்கு வருகின்றன. சமீபத்தில் லண்டன் சஞ்சிகையொன்று ஷோ அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியது. அதில் அவருடைய சந்தாவைப் புதுப்பிக்கும்படி கண்டிருந்தது. ஷோவும் அப்படியே இரு வருடச் சந்தாப் பணத்தை அனுப்பியிருந்தார்.

சந்தா அதிபருக்கு ஒன்றும் புரியவில்லை. 'எதற்காக இப்படி' என்று அவர் ஷோவைக் கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினுர். "எனக்கு இப்போது 90 வயது நடக்கின்றது. அதிககாலம் வாழ்ந்து விட்டேன். இன்னும் இருவருடங்களுக்கதிகமாக இருப்பேன் என்று எப்படி நம்பலாம்? இரண்டு வருடம் சகல ஜால வித்தைகளையும் முடித்துவிடப்போது மானது.'

### அடகடவுளே!

கடந்தவாரம் 'இலங்கையிற் ருெப்பி' என்று எழுதியிருந்தேன் அல்லவா? இது அநேக வாசகர்களின் பற்களை உடைத்து விட்டதாம். "'பாட்டைசாரி' கூட இப்படிப் பள்ளந் திட்டிகளில் வீழ்ந்தெழும்புவதா," என்றுஒருவர் எழுதியிருக்கின்ருர். வேருெருவர் "இலங்கையிற் ருெப்பிக் கல் போரஸ்ட், (Tropical Forest) என்று எழுதவேண்டியதற்குப் பிழையாக எழுதியிருப்பதாக" நினைத்துப் படித்தாராம். பின்னர் அடைப்புக் குறிக்குள் இருந்த குறிப்பைக்கண்டு மூச்சுத் தெளிந்தாராம். இடையிடையே இப்படித் தறுகுறும்புகள் நடத்துவதாகில் ஏற்கனவே அறிவித்தல் செய்துவிட வேண்டுமென வண்ணுர்பண்ணைச் சந்தாதார் ஒருவர் ஆவேசத்துடன் 'போஸ்கார்ட்' ஒன்று கிறுக்கித் தள்ளியிருக்கின்ருர்!

### புத்தாண்டும் பொங்கலும்

1946 கண்களைத் திறக்க முன்னர், அநேக கிறிஸ்தவ அன்பர்கள் 'பாட்டைசாரி' க்குச் சோபனங்களும்வாழ்த்துக்களும்அனுப்பத்தொடங்கி விட்டனர். இதில் மூழ்கி வெளிக்கிளம்ப முன்னர் பொங்கல் வாழ்த்துக்கள் வந்து மேசைமீது குவிந்துகொண்டிருக்கின்றன. தனித்தனி ஒவ்வொரு அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள் அனுப்ப முடியாத விடத்தும் இதோ, இந்தவாரமே நான் துதி கூறி வாழ்த்தி விடுகின்றேன்,

புத்தாண்டு போற்றிப் புதுப்
பொங்கல்பொங்கி மகிழ்வோம்
புதுவாழ்வு—அன்பர்கட்குப்
பொலிகவினிதென்றே.


PARAMESHVARA COLLEGE

## பரமேஸ்வரக்கல்லூரி

பரமேஸ்வரக் கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர், 1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளிற் காலை 10 மணி தொடக்கம், கல்லூரி அதிபரிடம் நேரில் விண்ணப்பஞ் செய்தல்வேண்டும்.

பரமேஸ்வரக் கல்லூரியிற் பாலர் வகுப்புத் தொடக்கம் சர்வகலாசாலை வகுப்புகள் ஈருகவுள்ள எல்லா வகுப்புகளிலும் மாணவர்சேர்ந்து இலவசமாகக் கல்வி கற்றல் கூடும்.

பரமேஸ்வரக் கல்லூரியிற் பாலர் மேற்பிரிவு தொடக்கமுள்ள எல்லா வகுப்புகளிலும்ஆங்கிலம்கற்பிக்கப்படும்.

சி. சிவபாதசுந்தரம்,
உப அதிபர்,
பரமேஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

1-1-46 [2594]

## Skandavarodaya College Chunnakam

Reopens on 7-1-46. Provision has been made for the teaching of Botany and Zoology in the H.S.C. class and Botany in the S. S. C. and J.S.C. classes. Pupils who have passed Tamil V-th std. examination will be admitted to English Standard V. A and special instruction given in English.

PRINCIPAL
5-1-46 Skandavarodaya College
[2598]

### விளம்பரம்

சிவநேயச் செல்வர்காள்!

புண்ணிய தலமாகிய கதிர்காமத்தில் மலைத்தெரிசனம் செய்ய விரும்புவோர் அடையும் சிரமத்தை நீக்க, பிள்ளையார்மலையிலிருந்து உச்சிமலைக்குப் போகும் பாதையில் படிகள் கட்டுவதற்கு, வதுளை ஏஜண்டரிட மிருந்து 18-8-41 ல் L A P 6262-ம் இலக்கக் கடிதமூலமாக நான் உத்தரவு பெற்றுள்ளேன். இதன் பொருட்டு இதுவரையில் 600 ரூபா சேகரித்து அத்தொகையில் 400 ரூபா செலவுசெய்து வேலை நடத்தியுள்ளேன். யுத்த காரணமாக ஏற்பட்டுள்ள உணவுக் கஷ்டத்தால் ஒருவருடமாக வேலை நிற்பாட்டப்பட்டிருக்கின்றது. அடுத்தாற்போல் வரும் ஆடித் திருவிழாவுடன் மறுபடி வேலை ஆரம்பிக்கப்படும்.

பணஞ்சேகரிப்பதற்கு நான் 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபா டிக்கற்றுத் துண்டுகள் அச்சிட்டுப் பணஞ் சேகரிக்கும்போது பற்றுச்சீட்டாகக் கொடுத்து வந்துள்ளேன். பண்ணுகத்திலுள்ள சிலர் இப்போது அவ்விதமாகத் டிக்கற்றுகள் அச்சடித்துக்கொண்டு நான் அனுப்பியதாக மேற்படி தருமத்திற்கெனப் பணஞ் சேகரிக்கின்ருர்கள். தருமவான்கள் இவர்களின் அணுப்புக்கு இடங்கொடாது சாவதானமாக இருப்பாராக. இத் திருப்பணிக்கு உதவிசெய்ய விரும்புவோர் என் விலாசத்துக்கு நேரே பணம் அனுப்புவாராக. அன்றியும் நான் நேரே சென்று பணஞ் சேகரிக்கின்றேன். மலாயாவிலும் என் பெயரைக் கூறிச் சிலர் பணஞ் சேகரிக்கின்ருராம். நான் ஒருவரையும் அங்கு அனுப்பியதில்லை.

இங்ஙனம்
கா. தம்புச்சாமி
காலையடிதெற்கு பண்டத்தரிப்பு.
3-1-46. [2599


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் ஞாபகச் சொற்பொழிவு—3

# நடுத்தர வகுப்பினர்க்கிடையிற் போட்டி

டொக்டர் ஐவர் ஜென்னிங்ஸ்

சிங்களரும் தமிழரும் பாஷை ரீதியான பாகுபாட்டை யுடையராகையின், பாஷையைப் பற்றிய விகற்பத்தை எடுத்துக்கூறுவோம். பேச்சளவில் இலங்கையின் மூன்று பாஷைகள் நிலைபெற வேண்டும். அவை முறையே சிங்களம், தமிழ், ஆங்கிலமென்பனவாம். பொருளாதார நிலைமை, அரசியல் விஷயங்கள் என்பன விருத்தியடைதற்கு இப்பாகுபாடு இன்றியமையாதது. ஆங்கிலம் பேசும் நடுத்தர வகுப்பினர் நாட்டின் நிலையான முற்போக்கிற் பெரிதும் உரிமையுடையர். ஆனால் இவர்கள் தமது அதிகாரத்தையும் பெருமையையும் தேசபாஷைபேசும் ஏழை மக்களிடமிருந்தே பெறுகின்றனர். நடுத்தர வகுப்பினர்க்குத் தாய்ப் பாஷையில் ஆர்வங் கிடையாதென நான் சந்தேகிக்கின்றேன். இலவசக் கல்வி வழங்கப்படுவதால் அவர்கள் அதனாற் பயனையடைந்து திருப்தியடைபவராயினர். ஆங்கிலத்துக்கு முதன்மை அளிக்க வேண்டுமென்று கூறுவதும் தேசாபிமானத்துக்கு மாறாகும். தேசபாஷைக்கே முதன்மை வேண்டுமென்பதை யாவரும் மனதில் விரும்பிக் கொள்வாராயினர். ஆங்கிலம் முற்றாகப் பேசுபவர் மிகச் சிலரே. இரு பாஷையையும் பேசுபவரே அனேகராவர். பாஷையை மாற்றியவுடன் மனப்போக்கு மாற்றமடையவில்லை. தேசபாஷையின் பூரணமான ஆர்வமும் அபிமானமும் வந்தெய்த இன்னும் இரண்டு மூன்று சந்ததிகள் கழிய வேண்டும். இப்போதிருப்பதிலும் பார்க்கக் கலப்பு விவாகம் அதிகமாக நடைபெற வேண்டும். கல்வி விசாரணைச் சபையாரின் சிபாரிசுப்படி இது சம்பவிக்கப்போவதாகக்காணோம். ஆங்கிலம் யாவர்க்கும் வித்தியாசமின்றிக் கற்றுக்கொடுக்கப்படின் ஒருபோது வகுப்புக் கட்டுப்பாடுகள் தடைகள் என்பன நீங்கக்கூடும். இலங்கையின் நானுபகுதிகளிலும் மத்திய வித்தியாசாலைகள் அமைக்கப்படுவது கல்வித்துறையில் ஏற்படும் நல்விருத்திக்கு அத்தாட்சியாகும். ஆனல், இதனால் விசேஷமான நன்மையை அடைதற்குத் தேசபாஷை கற்பிக்கப்படும் வித்தியாசாலைகளில் ஆங்கிலம் சிறிதாகப் பயிற்றப்பட வேண்டும். இப்படியானநிலையேற்பட்டவுடன் இலங்கையிலுள்ளார் யாவரும் இரு பாஷையிலும் வல்லுநராய் விடுவார்; அப்பொழுது வகுப்பு வாதமுந் தொலைந்துவிடும்.

## அரசியல்

இவ்விஷயம் எடுத்துக் கூறப்படுங்கால் இன்னொரு காரியம் ஞாபகத்துக்கு வருகின்றது. அரசாங்கசபையில் வகுப்புவாதம் தலைவிரித்தாடுவதற்குக் காரணம் யாது? இவ் விஷயத்தைப்பற்றி ஸோல்பெரி விசாரணைச் சபையினர்க்கும் பிரிட்டிஷ் அரசினர்க்கும் அளவுகடந்த ஆர்வத்துடன் எடுத்துக் காட்டிவிட்டனர். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆங்கிலேயர்க்கும், வேல்ஸ்தேச வாதிகட்கும், ஸ்கொத்லாந்து தேசவாசிகட்கும் தனித்தனி பிரத்தியேகமாக நின்றுவாதிப்பார் எவருமில்லை. அப்படிப்பேசுவதும் எவராலும் விரும்பப்படுவதுமில்லை. பொதுவாகப் பிரித்தானியாவின் நன்மைகளே பேசுவார்கள். கட்சி பேதங்கள் பாராளுமன்றத்தில் உளதன்றி வகுப்புப் பேதவாதிகள் கிடையா. சிங்கள மகாசபை, அகில இலங்கைத் தமிழர்சபை என்பனபோன்ற ஸ்தாபனங்கள் இங்கிலாந்திற் கிடையா. பருத்தித்துறைப்பகுதிப் பிரதிநிதி தானே அகில இலங்கைத் தமிழரின் பிரதிநிதியெனக் கூறும்போது ஏதோ புதிய விஷயத்தை அறிய வேண்டியவராகக் குடியேற்றநாட்டு மந்திரியார் தடுமாற்றமடைகின்றார். அரசியற்றிருத்தங்கள் ஆலோசிக்கப்படுங் காலங்களிலேயே வகுப்புவாதப் பிரச்சினைகள் தோன்றிவிடுகின்றன. தங்கள் கோரிக்கைகளைச் சிறுபான்மைக் கட்சியினர் மிக வுரப்பாக வாதிக்க முற்படுகின்றனர். அப்பொழுதுதான் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும் இவ்விஷயத்தை ஆலோசிக்க வேண்டியவ ராகின்றனர். இலங்கையில் வசிக்கும் நாங்கள் கருதுவதுபோலன்றி ஸோல்பெரி விசாரணைச் சபையினர் இந்த வகுப்புவாதப் பிரச்சினைக்கு விசேஷ கவனம் அளிக்கின்றனர். பொதுவாக எல்லாவிஷயங்களைக் குறித்தும் அரசாங்க சபையினர் வகுப்புரீதியாகக் கட்சி சார்ந்துகொள்வதில்லை. ஆனால் பெரும்பான்மை வகுப்பினராகிய சிங்களர் அரசியலதிகாரத்தைப்பெறின் வகுப்புத் துவேஷத்துடன் நிர்வாகத்தை நடத்துவாரெனச் சிறுபான்மை வகுப்பினராகும் தமிழர் முதலியோர் அஞ்சுகின்றனர். அப்படிச் சம்பவிக்கக் காரணமில்லை.

## நடுத்தர வகுப்பினரின் ஆதிக்கம்

இவ்வாறு சந்தேகமும் அச்சமும் ஏற்படுவதற்குக் காரணம் யாது? வகுப்புவாதத்துக்குக் காரணம் யாதென்று முன்னர் ஆராய்ந்தவிடத்து இதற்குபதில் ஓரளவுக்கு வழங்கியுள்ளேன். அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிப்போர் பொதுவாக நடுத்தர வகுப்பினைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஆங்கிலம் நன்றாகக் கற்றவர்கள். வேற்று நாட்டவனாகும் எனக்கு இந்த நடுத்தர வகுப்பினரின் மனப்பான்மை நன்றாக விளங்குகின்றது. சாதாரண தொழிலாளர்க்கு உயர்தரக்கல்வியும் சர்வகலாசாலைக் கல்வியும் கிடைக்கச்செய்த பின்னரன்றிப் பிரிட்டனில் மேற்படி கல்விகளை இலவசமாக்க எவரும் துணியமாட்டார். கட்டாயக்கல்வியின்றி இலவசக்கல்வி அளிப்பின் அதனாற் பயனடைவோர் நடுத்தர வகுப்பினரேயாவர். இதற்குத் தொழிலாளர் இணங்குவாரா? அவர்கள் உயர்தர வித்தியாசாலைகளிலும் சர்வகலாசாலையிலும் தாம் கல்விகற்பதற்கு வசதியளிக்கும்படி கேட்கவில்லை. இலவசக் கல்வி பெரியவோர் பேறாக அவர் மதிக்கின்றனர். ஆனால் அதனால் பெரும்பேற்றை யடைபவர் நடுத்தர வகுப்பினரே. இவ்விதமான பல உதாரணமான சம்பவங்களைச் சென்ற ஐந்துவருட அனுபவத்தில் நான் அறிந்திருக்கிறேன். அவற்றுள் இதுவே மிகவும் அதிசயமானது. ஆங்கிலம் பேசும் இந்த நடுத்தர வகுப்பினர் தொழிலாளரிலும் பார்க்க வகுப்புவாதத்தை மேற்கொள்ளாதவராக இருக்க வேண்டியவர். இவ்வகுப்பினர்க்குத் தாய்ப்பாஷையில் அளவுகடந்த அபிமானங் கிடையாது. ஆங்கிலம் அறியாதவருடனன்றி இவர்கள் தேசபாஷையைப் பேசுவதில்லை. இவர்களில் அநேகர் அரசியல் நூல்களை நன்கு கற்றவராவர். வகுப்புவாதத்தை இவர்கள் மேற்கொள்வதில்லை. எனவே அரசாங்கசபையில் வகுப்புவாதம் தலைகாட்டுமென ஏன் அஞ்ச வேண்டுமோ?

## கல்வியின் அவசியம்


இதற்கு இரண்டு விடைகளை நானளிப்பேன். முதலாவதாக அரசாங்கசபை குறிக்கப்பட்டோரின் நன்மைக்காகவே இருப்பதாகின்றது. இலங்கையிலுள்ள நடுத்தரவகுப்பினர் தொகையில் மிகச் சுருங்கியவர். அரசாங்க சபைக்கு அங்கத்தவராகத் தெரியப்பெற்றோரின் தேர்தல் தொகுதியில் சராசரி 2000 குடும்பங்களேயுள்ளன. இக் குடும்பங்கள் நெருங்கிய தொடர்புடையன. ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது பிரதிநிதியுடன் நேரே பழகியவராயிருக்கின்றனர். நடுத்தரவகுப்பினரிலிருந்தே பொதுவாக அரசாங்க உத்தியோகத்தர் தெரியப்படுகின்றனர். அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பதே இவ் வகுப்பினரின்விசேஷமான ஆர்வமாகும். இதுகாரணமாகப் போட்டிகள் ஏற்பட்டு அரசாங்கசபையினரும் அதனுள் ஈடுபட வேண்டியவராகின்றனர். நிர்வாகசபை அரசியல்முறையும் இத்தீமை விருத்தியடைதற்கு உதவியாகின்றது. அரசாங்க சபையிலுள்ள சிங்கள அங்கத்தவர் யாழ்ப்பாணக் குடும்பத்தினரைப் பொதுவாகப் பழகி யறிந்தவரல்லர். தமிழ்ப் பிரதிநிதிகளும் அவ்வாறே சிங்களக் குடும்பத்தினரை அறியார். இக்காரணத்தாற்றான் குறிக்கப்பட்ட ஒருவரைப்பற்றி நோக்குமிடத்து அங்கத்தவர்கள் வகுப்புத் துவேஷங்காட்ட முற்படுகின்றனர் இருவர்க்கிடையில் தோன்றும் எதிரிடை, வகுப்பினர்க்கிடையில் விரோதமாக மாறிவிடுகின்றது. பறங்கியரும் வடமாகாணத்திலுள்ள தமிழரும் தமது சனத்தொகை வீதத்துக்குக் குறையாத பிரகாரம், அரசினரின்கீழ் உத்தியோகம் வகிக்கின்றனர். ஆனால் முஸ்லீம்களும் கண்டிப்பகுதியில் வசிக்குஞ் சிங்களரும் தமது சனத்தொகைக்கு ஏற்ப உத்தியோகம் பெறவில்லை. இந்த உத்தியோகம்பெறும் வாஞ்சைகாரணமாகத்தான் வகுப்புவாதம் நிலைபெற்று வருகின்றது.


எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

★

மங்களப் பொங்கலுடன் புத்தகப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது!

"ஆமாம், அல்லயன்ஸ் கம்பனி, அன்புநிலயம், சக்தி காரியாலயம், ஜோதி நிலையம், நவயுகப் பிரசுராலயம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் முதலிய நிலயங்களின் வெளியீடுகளையும் ஏனைய ஆங்கில-தமிழ்நூல்களையும் ஸ்ரீசண்முகநாதன் புத்தகசாலையில் பதிப்பாளர் குறிப்பிட்ட விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். ............"



"அப்படியா-சரி, மூவரும் அங்கு நேரே போவோம்..."

S.S.சண்முகநாதன் &சன்ஸ்

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்


# நமது வாசிகசாலை

**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்**—வெள்ளிமலர்—பதிப்பாசிரியர்கள்: சுவாமி சர்வக்ஞாநந்தர், சுவாமி பரமாத்மாநந்தர்; பதிப்பாளர்: சுவாமி அத்வயாநந்தர்; பிரசுரம்: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை; விலை: தபாற்செலவு உட்பட ரூ. 1–11–0.

தமிழ் நாட்டிலே சமயத்தொண்டு புரியும் சிறந்த ஒரு பத்திரிகையின் வெள்ளிமலர் இது என்று கூறிவிட்டாலே, இதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறிமுடித்ததாகும் என்பது என் அபிப்பிராயம் சமயத்தொண்டில் ஈடுபடும் ஒரு பத்திரிகை எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கு இலக்கணமாக இந்தச்சஞ்சிகை வெளிவந்துகொண்டிருக்கிறது. அரசியல், பொருளாதாரம் முதலியவற்றிலே ஈடுபடாமல், தூய நோக்கத்துடன் வெளிவந்திருக்கிறது. தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற அறிவாளிகள் பலரின், கட்டுரைகள் இம்மலரை அலங்கரிக்கின்றன.

அம்புஜம்மாள், கி. சாவித்திரி அம்மாள், தி. சு. அவினாசிலிங்கம், கி. வா. ஜகந்நாதன், டி. கே. சிதம்பரநாத முதலியார் என்போர், இம்மலரிற் பல அரிய விஷயங்களை எழுதியிருக்கும் பெரியார்களிற் சிலராவர்.

"இனிய தமிழில் செந்தமிழில்
என்றும் தழைத்துவரும் தமி
கனியும்பாலும் தேனுங்கற் [ழில்
கண்டும் அனைய கட்டுரைகள்
புனிதகவிகள் கதைக ளெலாம்
பொலிய வருமிப் பத்திரிகை
நனிபிவ் வுலகில் வாழவரம்
நங்கை பாக நல்குகவே"

எனக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இப்பத்திரிகையை வாழ்த்தியிருக்கிறார். அவரோடு சேர்ந்து நாமும்அவ்வாறேவாழ்த்துகிறோம்.

—S. N.

**மங்கை**—பெண்களின் புத்தகம்—பதிப்பாசிரியர்: "குகப்ரியை" பிரசுரம்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை; விலை: ரூ. 1–0–0.

இதுவரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பெண்களின் புத்தகமாகிய மங்கையை இன்று கண்டு மகிழ்வுற்றேன். இது குடும்பப் பாதுகாப்பு, வீட்டு வேலை, குழந்தைவளர்ப்பு, குழந்தையின் மனோதத்துவம், உடலோம்பல், சமையல், தையல், கட்டுரை, எனப் பெண்களுக்கு உபயோகமான விடயங்களுடன் ஆசிரியர் குகப்ரியை என்பவரால் வெளியிடப்படுவது. சிறந்த விடயங்களுடன் வெளியிடப்பட்டிருப்பினும் நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை எனலாம். இதுவே முதற் புத்தகமாதலின் பின்வருவன சிறக்குமென எண்ணுகிறேன்.

விடயங்கள் ஒவ்வோர் புத்தகத்திலும் தொடர்புற்றுப் பாடங்களாக எழுதப்படின் எமது பெண் சமூகத்துக்குப் பெரிதும் உபயோகமாகும். குழந்தையின் மனோநிலையை அறிந்து வளர்த்தல் தாய் கடனாதலின், பிள்ளையின் மனோதத்துவங்களையும் செயல்களையும் அவற்றுக்கேற்பத் தாய் வளர்க்கும் முறைகளையும் தெளிவாகவும், தொடர்பாகவும் விளக்கும் கட்டுரைகள் இருப்பின் எல்லாராலும் விரும்பப்படும். இதற்குத் தக்க உளநூலறிஞரையும், அநுபவம் வாய்ந்தவரையும் துணைபெறுமாறு ஆசிரியரை வேண்டுகிறேன். தையலும் தொடர்பான பாடங்களாக விளக்கப்படின் நன்றும். சமையற்பகுதி தமிழ்நாட்டு முறையில் இருத்தலே சிறப்புடைத்தெனக் கருதுகிறேன்.

குடும்பத்திலுண்டாம் பாகஷ்டங்களையும் அவற்றைத் தீர்க்கும் வழிகளையும் காட்டும் கதைகளைச் சேர்த்தல் நன்று, இவ்வகையில் அமைந்து பெண்சமூகத்துக்கு ஓர் ஆசிரியனாக இது விளங்குமென எதிர்பார்க்கலாம்.

—இ. இராசம்மா

**யாழ்பாணக் கல்லூரிக் கலமபகம்**: [Jaffna College Miscellany —Dec. 1945] வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெளியீடு.

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கும் இக்கல்லூரிப் பத்திரிகையில் இம்முறை தமிழ்க் கட்டுரைகள் சேர்க்கப்படவில்லை. இது விரும்பத்தக்கது. தமிழுக்குத் தனியிடங் கொடுத்து முழுக்க முழுக்கத் தமிழ்க் கட்டுரைகளுடன் மற்றுமோர் வெளியீடு ஏககாலத்தில் அச்சிட்டுப் பரப்புவதுதான் உத்தமம். பத்திரிகையிற் காணப்படும் ஆசிரியர்குறிப்புகளுள "நாமும் கல்வித் திருத்தங்களும்" என்ற பகுதியிற் காணப்படும் கருத்துக்களை ஏற்க முடியாது. அரசாங்கமே சீரிய முறையில் நாட்டுமக்களுக்குக் கல்வியூட்டவேண்டும். சார்ந்த உரிமைகளை அனுபவித்து வருபவர்களுக்குக்'கன்னங்கரமாற்றங்கள்' கசப்பது நூதனமல்ல. சென்னைக் கிறிஸ்தவர் கல்லூரியின் உதவி அதிபர் வண. ஜே. ஆர். மக்பேல் அவர்களின் ஒரு வானொலிப் பேச்சும் இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. சேர் ஒஸ்பேற் சிற்வெல் அவர்கள் எழுதிய சுயசரிதையின் மதிப்புரையாக அப்பேச்சு அமைந்திருக்கின்றது. மலாயாவில் வதியும் யாழ்ப்பாண அன்பர் எஸ். துரைராஜசிங்கம்அவர்களின் கடிதம் நன்றாகவிருக்கின்றது. இ. அ.


புடவைக் கட்டுப் பாட்டு அறிவித்தல்

புடவைக் கூப்பன்கள்

ஒன்பதுமுடிய உள்ள புடவைக் கூப்பன்கள் ஜனவரி மாதம் முடிந்ததும் வலுவு அற்றதாகின்றன; அன்றியும் பயன்படுத்தப்படாத கூப்பன்களுக்காகப் புதிய கூப்பன்கள் கொடுக்கப்படமாட்டா.

2. 1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் திகதிக்குமுன் இக்கூப்பன்களைப் பயன் படுத்தவும்

ஈ. ரெட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 1945-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் திகதி

[2600]


## ORDER NISI

*In the District Court of Jaffna*

In the matter of the Estate of the late Muttupillai wife of Arunasalam of Inuvil

*Deceased*

*Testamentary Jurisdiction* } No. 407

Sinnathamby Arunasalam of Inuvil

*Petitioner*

*Vs.*

1. Arunasalam Thambyrajah
2. Supper Karthikesu both of Inuvil

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire, District Judge, Jaffna on the 29th. day of November 1945 in the presence of Mr. T. Kumarswamy, Proctor, on the part of the petitioner and on reading the affidavit and petition of the petitioner.

It is ordered that the abovenamed 2nd respondent be appointed guardian-ad-litem over the 1st repespondent a minor lunatic to represent him in this action and that the petitioner be declared entitled to letters of administration to the estate of the abovenamed deceased and that the same be issued to him accordingly unless the abovenamed respondents or any other person shall on or before the 31st. day of January 1946 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary

This 29th. day of November 1945

(*Sgd.*) R R. Selvadurai
District Judge

(2582-ii)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கண' அரங்கம்

# 'அரசியற்றி[ற்தி, ல்தி]ட்டத்தின்' இலக்கணம்

மா. பீதாம்பரன்
[தமிழ்மாணுக்கன்]

இஃது அரசியற் றிட்ட வாராய்ச்சியன்று; அரசியற் றிட்டத்தின் இலக்கணத்தை ஆராய்வான் எழுந்ததும் அன்று. "அரசியற் திட்டத்தின் அலங்கோலம்" என்னும் தலைப் பெயரும் குறிப்புரையும் (24-12-45) இல் வெளிவந்த இந்துசாதனத்தில் விளங்கியது. அரசியற் திட்டத்தின் சந்தி வழுவினை ஆராய்வான் எழுந்தது அக்குறிப்பு. இக்காலத்து வெளிவந்துலவும் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மலிந்துள்ள சந்திப்பிழைகளை ஆராய்வது மணற் சோற்றிற் கல்லாராய்வதை மானும். எனினும், 'புதியன புகுதல்' என்னும் நன்னூல் விதிக்கமைய வந்துலவும் சந்திகள் பலப்பல. இவையிற்றின் நிலைபேறு காலத்தின் பாற்பட்டதொன்றும். இவற்றுள் ஒரு சில உயர்ந்தோர் வழக்காகக்கொள்ளப்பட்டு நிலைபெறலும் கூடும்; இவற்றுட் பல இயற்றமிழ் அறிஞராலேதள்ளப்படவும் கூடும். கவிச்சுவையில் ஈடுபட்டுக் கம்பராமாயணத்தையும், முத்தொள்ளாயிரத்தையும் ஆராய்ந்து புத்தம்புதிய சந்திகளோடு வெளியிட்டவர் திரு. டி.கே.சி. அவர்கள் ஆவர்; அவர் படைக்கும் சந்திகட்குக் காரணம் அன்னுரின் ஆங்கிலக் கல்வியின் ஆற்றல் போலும்; மணணரித்துப் பொன் கொள்ளுமாறு, அவர் கூறும் சுவையியல்புகளின் ஒரு சிலவற்றை ஒரு சிலர் கொள்ளுகின்றனர். சுவையினை மாத்திரமா? பொன்னைக்கொளச் சென்று மண்ணினில் மாண்டவாறு, சுவையுடன் சேர்த்து நவையுள சந்திகளையும் கொள்கின்றனர். பாடிமாற்றத்திலும், பொதுமக்கள் வசனத்திலும் சந்தியியல் வரம்பு கடந்தாலும், கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களிலும் 'டிகேசிச்' சந்தியைப் புகுத்துதல் முறையாகுமா? தகுமா? நகைச்சுவைக்கு 'ஆரியர் பேசுந் தமிழினை' எடுத்துக் காட்டெனக் கூறிய பேராசிரியர் (தொல்-பொருள்) இப்பூதலத்து இப்பொழுதத்து வருவரேல், 'டிகேசிச் சந்தியை'யும் அவரைப் பின்பற்றுவோர் சந்திகளையும் எச்சுவைக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறுவரோ அறிகிலேம். (அவலச் சுவைக்குப் போலும் -ப. ர்.) யாழ்ப்பாணத்து மாணுக்கரும் 'பால்க்காரி' என்று எழுதத் தொடங்கியுள்ளனர். ஆதாரம் 'டிகேசி' என்பர். ('இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பல்' விதியன்றோ?) கம்பராமாயணத்தையும், பெரியபுராணத்தையும் சுட்டெரிக்கக் கங்கணங்கட்டி நிற்கும் ஒருசார் 'தமிழ்த்தொண்டர்' தமிழுக்குச் செய்யும் கெடுதியினும், புத்தம்புதுச் சந்தி சமைப்போர் செய்யும் தீங்கு பெரிது! பெரிது!!

'அரசியற் திட்டத்தின்' அலங்கோலத்திலும் அலங்கோலம் மிக்க 'சந்தி கிந்திகள்' புதினத்தாள்களிலும், புற்றீசலெனப் புறப்படும் புத்தகங்களிலும், அரசாங்க 'இலாகாக்கள்' வெளியிடும் சுற்றுநிருபங்களிலும், வித்தியாபகுதியாரின் பத்திரிகைகளிலும், பரீட்சை வினக்களிலும், அமைக்கப்பட்ட பாடப் புத்தகங்களிலும் மலிந்திருப்ப, 'அரசியற் திட்டத்தின்' அலங்கோலந்தான் அலங்கோலம் எனக் கூறப்புகுவதாற் பயனென்?

நிற்க, 'அரசியற் திட்டத்தினை' ஆராய்வாம். 'பால்க்காரி' என்னும் வாய்பாட்டுச் சந்திகளை 'டிகேசிச் சந்தி' என்று யாழ்ப்பாணத்து மாணுக்கருள் ஒரு சிலர் கூறிக்கொள்வது போல், 'அரசியற் திட்டம்' போன்ற சந்திகளைச் சிவைதாச் சந்தி' (சி. வை. தா) என்பர். இச்சந்தியினை முதன் முதலாக எடுத்தாண்டுள்ளவர், "வித்துவசிரோமணி"யென, பேராசிரியர் திரு. பி. சுந்தரம்பிள்ளை அவர்களாற் போற்றப்பட்டவரும் (மனேன்மணியம்—10) தமிழ் நாட்டினரால் இன்னும் போற்றப்படுபவருமாகிய இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை B.A. அவர்கள் ஆவர். தமிழகம் போற்றும் பேராசிரியர் தாமோதரம் பிள்ளை அவர்கள், 1890ஆம் ஆண்டில் வெளியிட்ட இலக்கண விளக்கத்திலும், சூளாமணி வசனத்திலும் இவ்வகைச் சந்திகளைப் பெரிதும் அமைத்துள்ளார்கள். அவற்றுட் சில காட்டுதும்:

'அம்முதற் பொருளாற் தோன்றுதல்பற்றி (6), அன்பு காரணத்தாற் தோன்றிய (27), இவ்விலக்கணத்திற் திரியாது (27). நிலமக்களுட் தலைமக்களும் (26). இலக்கண விளக்கத்தின் இரண்டாம் பதிப்பு, இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இவரால் வெளியிடப்பட்டுள்ளதெனினும் இதன் பதிப்பாசிரியர், இவர் தந்தையார் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. ச. சோமசுந்தரதேசிகர் அவர்கள் ஆவர். இப் பதிப்புக்கு முன்னுரை அளித்த, சென்னைப் பல்கலைக் கழகத்தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் இராவ் சாஹிப், திரு. ச. வையாபுரிப் பிள்ளை B. A.; B. L., அவர்கள் ஆவர். பதிப்பாசிரியர் சிவைதாச் சந்திகளை (ற்த், ட்த்) இருந்தவாறே பதித்ததுமன்றி அவற்றை அங்கீகரித்துக் 'குறிப்பும்' எழுதியுள்ளார். அது வருமாறு: இக் காலத்தார் கடினசந்திகளை விலக்கிவரும் முறைக்கு ஏற்ப, இந்நூலின் உரையிற் பல இடங்களிலே சந்தியை ஒருபால் தழுவியும் ஒருபால் தழுவாதும் அச்சிட்டுள்ளேன். 'அம் முதற் பொருளாற்-தோன்றுதல்பற்றி' (பக். 6 வரி 29). 'நிலமக்களுட் தலைமக்களும் (பக். 26 வரி 13) என்பன உதாரணங்கள். திரு. தாமோதரம் பிள்ளை அவர்களும் இவ்வாறே அச்சிட்டுள்ளார்கள். இப்புது முறையினையே நான் பின்பற்றியிருக்கிறேன்" 26-6-41.

இப்புதுமுறையினைக்கையாண்ட பிள்ளையவர்கள், 'முதல் பொருள், வேனில்காலம், பொருள் விரிவு' என்று எழுதினர் அல்லர். இவற்றை முறையே 'முதற்பொருள், வேனிற்காலம், பொருட் பிரிவு' என்றே எழுதியுள்ளார். இச் சந்திகள் 1890ஆம் ஆண்டில் வெளிவந்த நூலில் உளவேனும் அப்புதுமுறையை இற்றைவரை யாராயினும் கண்டித்திலரோ அறிகிலேம். யாரேனும் பிள்ளையவர்களின் புதுமுறையைக் கண்டித்திருப்பின் அதனை வெளியிடுதல் நன்றும். தமிழ் நாட்டிற் றலை சிறந்து விளங்கும் புலவர்கள் எழுதிய தொடர்கள் சிலவற்றை ஈண்டுத் தருவாம்: குறை நிறைகளை ஆராய்க. 'பாவனு சக்தி வாய்ந்திருந்தால் தானே', 'இப்பாட்டினுள் தங்கிநிற்க'; 'உண்மையென்பது மருந்துக்கும் இவற்றில் காணக்கிடையாது'; 'குரல் மேலே சென்றால்தானே;' என்னைப்போல் ஆராய்ச்சியில் கிளம்பவில்லை.

[நிற்க (1) 'இல்லறமல்லது நல்லறமன்று'; 'இல்லறமல்லது நல்லறமல்ல'; இவற்றில் வழுக்கள் உண்டா? 'இதுவன்மை யுடையதல்ல'; 'அதுமட்டுமல்ல' சரிபிழை அறிதற்கு நன்னூலைக் கொள்வதா? சின்னூலைக் கொள்வதா?] ல்+த், ள்+த் வருமிடங்களில், ஏகாரத்தைச் சேர்த்து எழுதியுள்ளார்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்; தமிழ்ப்பெருங்கவி, முதுபெரும் புலவர் ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் ஏகாரஞ் சேர்த்து இனிமையாக எழுதியுள்ளார்கள். பெரியபுராணவசனம், அகலிகை வெண்பாவசனம், என்னுமிவற்றை நோக்கிக் காண்க. முதலியாரவர்களின் தமிழ், கர்ண கடூரமான கடுந்தமிழும் அன்று; சந்திவழுவமைந்த கொடுந் தமிழுமன்று; செவ்வி வாய்ந்த இயற்றமிழ் ஆகும். செய்யுளையாயினென், வசனத்தையாயினென் நன் முறையில் அமைக்க விரும்புவோர்க்கு முதலியாரவர்களின் நூல்கள் நற்றுணையாகுமென்பது மிகையாகாது. வழுக்களின் வகையினைக் கூறும் 'பிரிபொருட் சொற்றொடர்......புலவர்' (தண்டி - அ. 99) என்னும் சூத்திரத்திற்கு உரை கண்ட உரை ஆசிரியர் சுப்பிரமணியதேசிகர் "முன்னரொன்பது வழுவுங் குற்றமாதல் பெரும்பான்மைய; குணமாதல் சிறுபான்மைய வென்றற்கும்......இவ்வாறு வைத்ததென்றறிக" என்றதனுலும், இலக்கண விளக்க ஆசிரியர் திரு. ஆரூர் வைத்தியநாத தேசிகர் "ஒன்பதும் ஆறுமாகப் பிரித்தோதினர் (9ஆவது சந்தி வழு) முன்னரொன்பதும் பெரும்பான்மை குற்றமாகச் சிறுபான்மை ஒரோவிடத்துக் குணமாதலும்......" என்றதனுலும், "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே" (நன்னூல்), "ஓரிடங்களிற் களையப்படும் எனவே, சிலவிடங்களில் வழுவமைதியாகக் களையப் படாதென்பதூஉ மாயிற்று" (மாறன்) "உணரக் கூறிய புணரியன் மருங்கிற், கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே" (தொல்காப்பியம்), "கடிசொல்லில்லைக் காலத்துப்படினே" (தொல். சொல். எ. இயல் 452 நச்சினர்க்கினியம்) என்பதற்கு "இவை தொன்று தொட்டு வந்தனவல்ல, என்று கடியப்படும் சொற்கள் இல்லை; அவ்வக்காலத்துத் தோன்றி நன்மக்கள் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின்" என்று உரை கூறினர் நச்சினர்க்கினியர்; பிறர் வேறு கூறுவர். என்பனவற்றுலும் 'புதியன புகுதலின்' பாற்படுவன 'காலத்துப்படின்' அவற்றைக் கொள்வதனுலாகும் இழுக்கென்னை? 'போயினுன்' என்பது 'போனுன்' என்றுயது வழுவாகுமா? 'அருமருந்தன்னபிள்ளை' 'அருமந்தபிள்ளை' யாயது கொளற்பாலதெனில், 'உங்கள் அப்பன்',— உங்க அப்பன் — உங்கப்பன் —'கொப்பன்' என்றதனையும் இவைபோன்ற பிறவற்றையும் கொள்ளுவதா? தள்ளுவதா?

—சென்ற நூற்றுண்டினுள் 'உயர்ந்தோர்வழக்கிலும் நூல்வழக்கிலும்' புதியனபுகுதலால் ஏற்பட்ட மாற்றங்கள் பல. இவைகளைத் துருவித் துருவி யாராய்ந்து நன்னூலார், சின்னூலார், தொன்னூலார் முதலியோர் செய்தவாறு 'தமிழ் இயல்' ஒன்றினை அமைத்தல் இலக்கண விலக்கியத்துறை போய புலவரைப் பொறுத்த பெருங் கடனுகும். முந்துநூல்களை ஆக்கினேரும், உரைகண்டாரும் விரிந்த நோக்குடையர் என்பதும், மொழிவளர்ச்சியின் இயல்பினை நன்கறிந்தவர் என்பதும், மேற்காட்டப்பட்ட சூத்திரங்களினுலும், உரைகளினுலும் இனிது விளங்கும். "சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றுனே செய்யுள் செய்க", "ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்திலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய" "அவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா." "அவ்வக்காலமும் இடனும் பற்றி ஏற்றவாற்றுற் செய்யுள் செய்யவேண்டும் என்பது" "மரபென்பது, காலமும் இடனும் பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவற்றுக்கு ஏற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமை" (பேராசிரியர்) என்பனவும் நோக்கற்பாலன.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சுருட்டுத்தொழில்

யாழ்ப்பாணத்திற் கவனிக்கப்படக்கூடிய முக்கிய கைத்தொழில் சுருட்டுத் தொழிலே. எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் வெளியான ஓர் ஆங்கில சரித்திர நூலில் பின்வருமாறு காணப்படுகின்றது. "வெள்ளைக்காரருள் திறம் சுருட்டுத் தேடிப் பிடிக்கும் சுருட்டுப்பிரியர், ஐரோப்பியர் திறமென விரும்பும் "காவன்ன" சுருட்டிலும் பார்க்க யாழ்ப்பாணச் சுருட்டையே விரும்புகிறுர்கள்.

தற்காலத்தில் யாழ்ப்பாணச் சுருட்டு வியாபாரத்தின் நிலையென்ன? அச்சுருட்டின் குணமென்ன? தென்னிலங்கையில் ஒரு யாழ்ப்பாணச் சுருட்டை வாங்கிப் புகைத்தால் அது யாழ்ப்பாணச் சுருட்டுத்தானே வென்று சொல்லமுடியாது. யாழ்ப்பாணச் சுருட்டின் குணமே கெட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தில் எத்தனையோபேர் சிகரட்டையும், பீடியையும் குடிக்கிறுர்கள். யாழ்ப்பாணத்தின் விசேஷ கைத்தொழிலாகிய சுருட்டைப்பற்றி யாழ்ப்பாணத்தவர் கவனிக்காவிட்டால், முடிவில் யாழ்ப்பாணச் சுருட்டின் தேவை குறைய சுருட்டுத் தொழிலும் மங்கி மறைந்துவிடும். ஈற்றில் தொழிலாளிகளுக்கே நட்டம்வரும். இதைத் தொழிலாளர் கவனிக்கவேண்டும். சுருட்டைக் குணத்துக்கேற்ப வகுத்து அதற்குரிய விலை குறிக்கப்படவேண்டும். 'சிகரட்', 'பீடி' குடிக்கிறவர்கள் யாழ்ப்பாணச் சுருட்டை விரும்பிப் பெறக்கூடியதாகச் செய்யவேண்டும். இதை யார் செய்கிறுர்கள்? அனைவரும் தமது சீவியகால வரும்படியை உன்னிக் குணமுள்ளசரக்குகளைக் குறைத்தும் சுருட்டின் விலையையேற்றியும் தங்கள் ஆதாயம் குறையாத உபாயங்களைச் செய்ய எத்தனிக்கிறுர்கள். இவ்வுபாயங்கள் சுருட்டுத்தொழிலின் விருத்தியை மிகவும் பாதித்துக்கொண்டு வருகிறது. சுருட்டுத் தொழிலாளரும் இதைக் கவனியாது, தங்கள் சம்பளம் மாத்திரம் உயர்ந்தாற் போதுமென்று கங்கணங்கட்டி நின்றுல் தங்கள் தொழிலுக்குப் பங்கம் விழைக்கிறவர்களாவர்.

ஆயிரம் சுருட்டுக்கு என்ன கூலி கொடுக்கவேண்டுமென்று [illegible] சுருட்டுத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சுருட்டு வகைகளுக்கு வேண்டிய முதலெவ்வளவு, செலவு எவ்வளவு என்ற உண்மைக் கணக்குத் தொழிலாளர்களுக்குத் தெரியுமா? தெரிந்தாலும் முதலாளிமார் அதை ஒத்துக்கொள்வார்களா? முதலாளிமாருக்குப் போகவேண்டியதை அவருக்கும் தொழிலாளிக்குப்போக வேண்டியதை, அவர்களுக்கு நீதிவழியில் பகிர்ந்து கொடுக்கவும், சுருட்டுத் தொழிலை விருத்தி செய்வதற்கும் சுருட்டுத் தொழிலாளிகளின் சிறு முதலைக் கொண்டு சுருட்டுத்தொழிலாளிகளால் நடத்தப்படும் ஒரு தொழிற்சாலை அத்தியாவசியம். இத்தொழிற்சாலையை ஐக்கிய விதிப்படி ஸ்தாபித்தால் வேண்டிய மூல தனத்தைக் கடனெடுக்கவும், கணக்குகளைப் பரிசோதிக்கவும் ஐக்கிய இயக்கத்தவரின் உதவி கிடைக்கும். இத்தகைய ஒரு தொழிற்சாலை ஏற்படுமாகில் முதலாளிமார் நடத்தும் தொழிற்சாலைகளும் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஒருவித குழப்பமுமில்லாமல் நடக்கும். தொழிலாளர்களால் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலை முன் மாதிரியைப் பின்பற்றி சமாதானமாகவும் ஐக்கிய முறையிலும் தொழிலாளர்களுக்குத்துன்பம் வந்தபோதிலும் வயோதிப காலத்திலும் உதவியும், வேதனப் பணமும் கிடைக்கக்கூடிய வழி வகைகளைச் செய்யலாம். யாழ்ப்பாணத்தின் சுருட்டுத்தொழிலாளர் யாழ்ப்பாணத்துக்கும் தங்களுக்கும் செய்யக்கூடிய ஒரு பெருந்தொண்டு யாதெனில் யாழ்ப்பாணத்திற் கூடிய சீக்கிரத்தில் ஒரு ஐக்கிய சுருட்டுத் தொழிற்சாலையை ஏற்படுத்தல்.

வி. வீரசிங்கம்
மானிப்பாய், 20-12-45.

### அரசாங்க உத்தியோகஸ்தர்க்குப் பிரிவுபசாரமா?

பொதுமக்களுக்குச் சேவை செய்தற்காக அரசாங்கம் உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கின்றது. அரசாங்க வருமானத்திலிருந்து சம்பளமும் பிற சௌகரியங்களும் அரசாங்கத்தால் இவர்கட்குக் கிடைக்கின்றன. இவர்கள் உத்தியோகம் மாறிப் பிறவூர்கட்குப் புறப்படுங்காலை இவர்களின் ஒரு சில நண்பர்கள் பொதுமக்களிடமிருந்து பணஞ்சேகரித்து வாணவேடிக்கைகளுடனும் மேளதாளங்களுடனும் பிரியாவிடைகளும் விருந்துபசாரங்களுஞ் செய்கின்றனர். இச் செலவுகளுக்குப் பொதுமக்களிடமிருந்து பணம் வசூலிக்கின்றனர். பின் சேர்ந்த பணம் எப்படிச் செலவாயிற்றென அறிக்கை சமர்ப்பிப்பதில்லை.

இதுதான் தருணமெனக்கருதிச் சிலகாரியதரிசிகளுந் தனதிகாரிகளும் சேரும் பணத்திலொரு தொகையினைப் பசியாறிவிடுகின்றனர். வேலையற்ற சில 'லோயர்'மாரினதும், ஆலாய்ப் பறந்துதிரியுஞ் சில ஆசிரியர்களினதும் வால்களை முறுக்கிவிட்டு நல்ல வேலைகளையும் வாங்கிவிடுகின்றனர்.

குறித்த உத்தியோகஸ்தரின் இனத்தவர்களும் இதில் முயற்சித்து உஷார்ப்படுத்துகின்றனர்.

சிலர் திரைமறைவில் நின்று வேடிக்கை பார்க்கின்றனர். சமீபத்தில் சாவகச்சேரியிலும் வடபகுதியில் வேறு இடங்களிலுஞ் சில அரசாங்க வேலைகாரர்களுக்கு உபசாரக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. ஐக்கிய சங்கத்தின் பெயரைச் சொல்லிப் பொதுமக்களிடம் வலுவுக்குப் பணஞ் சேர்த்துப் பசியாறுகின்றனர்.

அரசாங்கம் இச்சீர்கேடுகளையிப்பஞ்சகாலத்திலுமா பார்த்துக்கொண்டிருக்கின்றது? பொதுமக்களுங் கிளர்ச்சிசெய்து தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். சுயநலப் புலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்!

கல்வயல் க. சிவசம்பு
31-12-45.

த. தம்பித்துரை
பிரசண்ட விகடன்
ஸோல் ஏஜென்ட்
சுத்தானந்த பாரதியார் வெளியீடு, சோதி நிலைய வெளியீடு, கோதைநாயகி அம்மாள் எழுதிய நூல்கள், கதைப்புத்தகங்கள், நாவல்கள், சினிமாப்பாட்டுப் புத்தகங்கள் புதினப் பத்திரிகைகள்முதலியன எம்மிடம் கிடைக்கும்.
தலைமை நிலையம்:
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.
கிளை:
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய அன்பர்களுக்கு—IV :: "சுயா"

# இலங்கை 'ரயில்வே'

உங்கள் மலாய் ரயில்வேயைப் போல எங்கள் ரயில்வேயும் பண்டம் பாடிகளையும் ஜனங்களையும் மாத்திரம் தான் ஏற்றிக்கொண்டு போக உபயோகப்படுகின்றது என்று நீங்கள் எண்ணவேண்டாம். எங்கள் ரயில்வே எவ்வளவோ பிரயோசனமான காரியங்களை யெல்லாம் ஜனங்களுக்குச் செய்துவருகின்றது. சொல்லுகின்றேன் கேளுங்கள்:

ஸ்ரேசன்மாஸ்டர்மார் எல்லாருக்கும் ரயில்தான் விறகு 'சப்ளை' பண்ண வேண்டுமென்று எங்கள் ரயில்வேயின் சட்டமோ, என்னவோ. ஒவ்வொரு ஸ்ரேசன் மாஸ்ரர்மாருக்கும் ரயிலில் இருந்து போதியளவு நல்ல விறகு கட்டைகள் எல்லாம் கிடைத்துவருகின்றன. அவர்கள் விரும்பினல் தங்கள் தேவைக்குக் கண்டது போக எஞ்சியவைகளை விற்றுவிடலாந்தானே! இப்போது இங்கே விறகுக்கு நல்ல கிராக்கி. ஸ்ரேசன்மாஸ்ரர்மாருக்கு மாத்திரமல்ல 'ரயில்வே லயின்' பக்கங்களில் குடியிருக்கும் ஜனங்களுக்கும், தேனீர்க்கடைக்காரருக்கும் கூட விறகால் அவ்வளவு கஷ்டமில்லை. ஒரு கோழிமுட்டை, ஒரு போத்தல் கள்ளு, ஒரு 'கப்' தேனீர், நாலு வடை இப்படிப் பட்ட சில்லறைப் பொருள்களைக் கொண்டே விறகெரிக்கும் சுலபமான வழிவகைகளை அவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்' இது எங்கள் ரயில்வே செய்துவருஞ் சேவையா, இல்லையா? காலையிலும் மாலையிலும் ரயில் வரும் நேரங்களில் மாப்பிளையை வரவேற்கக் கையுறையோடு காத்துநிற்பவர்களைப் போலப் பெண்டுகளும் பிள்ளைகளும் கையில் ஏதோவெல்லாம் வைத்துக்கொண்டு 'லயின்' ஓரங்களில் நிற்பதே தனிக்காட்சி.

தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பதிலும் பார்க்க மிஞ்சிய தர்மம் வேறில்லை யென்பது என் எண்ணம். இந்தத் தர்மகைங்கரியத்தைக்கூட எங்கள் ரயில்வே செய்துவருகின்றதென்றால் எங்கள் ரயில்வேயைப்பற்றி நாங்கள் பெருமைப்பட நியாயமுண்டா இல்லையா? சுன்னுகத் தண்ணீருக்கு இலங்கை ரயில்வே முழுவதிலும் மதிப்பு. என்றாலும் வடபாகத்திலுள்ள ஒரு சில ஸ்ரேசன்களின் பக்கத்திலுள்ளவர்கள்தான் இதற்குக் கொடுத்துவைத்தவர்கள். சுன்னுகத்திலிருந்து ரயில்கள் புறப்பட்டு ஒவ்வொரு ஸ்ரேசன்களிலும் தங்கவேண்டியதுதான் தடை. ஸ்ரேசன் மாஸ்ரர் மாரின் வேலைக்காரர், தேனீர்க்கடைக்காரர், வேறு பக்கங்களிற் குடியிருக்கும் பெண்கள் இவர்கள் எல்லாரும், வாளிகளையும் குடங்களையும் தூக்கிக்கொண்டு வந்து தங்கள் இஷ்டம் போல் வேண்டியளவு தண்ணீரைப் பிடித்துக் கொண்டு போவதைக் காணும்போது எங்கள் ரயில்வேயைப் பற்றி நாங்கள் எவ்வளவு பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றோம் என்று நீங்கள் அறிவீர்களா?

அகதிகளுக்கு உதவுவதும் பெரும் புண்ணிய காரியமல்லவா! பளை கழிந்ததும், எத்தனை தேடுவாரற்று விடப்பட்ட நாய்கள், மார்க்கட்டுக்குப்போன தாய், ஏதும் தின்பண்டங்கள் வாங்கி வருவாள் என்று எண்ணிப் பொழுது ஏற ஏற அவள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு நிற்கும் குழந்தைகள் போல, ரயில்வே லைனின் இரு மருங்கிலும் ரயிலின் வருகையை எதிர்பார்த்து நிற்கின்றன. இவைகளின் சீவியம் எங்கள் ரயில்வே யில்லாவிட்டால் எப்படிப் போகும்? பிரயாணிகள் தின்றதுபோக எஞ்சியவைகளை எறிந்துவிடாவிட்டால் இந்த யாருமற்ற அகதிகள் எப்படிச் சீவிக்க முடியும்? ரயில் வரும் நேரம் ஸ்ரேசன்மாஸ்ரர்மாருக்குத் தெரியாவிட்டாலுங் கூட இந்த நாய்களுக்குத் தெரியாமற் போகாது.

நேரத்துக்கு நேரம் தங்களை அரித்து அரித்துச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கு மூஞ்சிகளாகக் குறட்டை அடித்துத் தூங்கிக்கொண்டு கிடக்கும் தங்கள் சோம்பேறிப் புருஷர்களை யெல்லாம் திருத்துவதற்கு, எங்கள் ரயிலில் கொஞ்சநாளைக்குப் பிரயாணஞ்செய்ய விடுவதே தவிர வேறு வழி கிடையாது என்று சொல்லுகின்றார்கள் எங்களூர்ப் பெண்கள். எங்கள் ரயில்களிலுள்ள மூட்டுப்பூச்சிகளுக்கும் அவர்கள் 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் தூங்கக்கூடியவர்களென்றால், அவர்கள்மேற் குற்றமில்லை. அவர்களைப் படைத்த கடவுளின் தப்பு. விடியற்சாமத்திலெழுந்து தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சப் போய்விட்டுப் பதினொரு மணி வரையில் பாடசாலைக்கு வந்ததும் மேசைமேற் சாய்ந்து தூங்கிவிடும் தங்கள் மண்டு வாத்தியாரைத் திருத்துவதற்கு ரயிலிலிருந்து கொஞ்ச மூட்டுப்பூச்சிகளைப்பிடித்துக்கொண்டு போய், அவர் நாற்காலியில் விட்டு வைக்கவேண்டுமென்று சொல்லுகின்றான் என் வாண்டுப்பயல். ரயிலில் பிரயாணம்பண்ணும்போது ஜனங்கள் களைப்பால் தூங்கிவிட முடிச்சுமாறிகள் புகுந்து தூங்குபவர்களின் பொருள்களை அடித்துக்கொண்டு போய்விடுவார்களோ என்று பயந்துதான் அரசாட்சியார் இந்த மூட்டுப்பூச்சிகளை ரயில் பெட்டிகளில் விட்டு வைத்திருக்கிறார்களென்று நான் எண்ணுகின்றேன். இரத்தப் பரீக்ஷையில் இவைகள் தேறியவைகள். யார் இரத்தம் நல்லது, யார் ரத்தம் கெட்டது என்று டாக்டர்மார் கூட இவைகளைப் போலக் கண்டுபிடித்துச் சொல்ல மாட்டார்கள்.

மூன்றும்வகுப்புப் பிரயாணிகள் பிரயாணஞ்செய்யும் பெட்டிகள் ஒரே கேவலமானவை, அசுத்தமானவை என்று ஜனங்கள் முறுமுறுக்கிறார்கள். இதை நானும் ஒத்துக்கொள்ளுகின்றேன் தான். தாங்கள் விட்டுவைத்திருக்கும் பெட்டிகள் சீர்கேடானவைஎன்று ரயில்வே அதிகாரிகளுக்கென்ன தெரியாமலா இருக்கின்றார்கள்? தெரிந்துகொண்டும் ஏதோவோர் நல்ல நோக்கத்தைக் கருதித்தான் இப்படிச் செய்திருக்கின்றார்களாக்கும் என்று உணர இந்த மூடச் ஜனங்களுக்கு அறிவேது. சுத்தமெது, அசுத்தமெது, என்று ஜனங்கள் உணரவேண்டாமா? வெயிலில் போனவனுக்குத்தானே நிழலின் அருமை தெரியும்? அசுத்தத்தைக் கண்டவர்களுக்குத்தானே சுத்தத்தைப்பற்றித் தெரியும்! ஆகையாற்தான் சுத்தமாயிருங்கள் சுத்தமாயிருங்கள் என்று பதினாயிரக் கணக்கில் சுவரொட்டி விளம்பரங்களை அச்சிட்டுப் பரப்புவதிலும் பார்க்க இப்படிச் செய்துவிட்டால் வெகு பயன் சனங்களுக்கு விளையு மென்று எங்கள் ரயில்வேயார் விளங்கி இப்படி மூன்றும் வகுப்புப் பெட்டிகளை வைத்திருக்கின்றார்கள்.

இவைகள் மாத்திரம் எங்கள் ரயில்வேயின் உபயோகங்கள் என்று எண்ணுகின்றீர்களா? இலங்கை, ரயில்வே தமாசுக்கும் பேர்போனது. இங்கிருந்து கொழும்புக்குப் பெட்டிகளில் முட்டைகளை நூற்றுக் கணக்கில் அனுப்புகின்றார்கள். ரயில் என்ன மகேந்திர ஜாலம் செய்துவிடுகின்றதோ தெரியாது. அவ்வளவு முட்டைகளும் பனங்கொட்டைகளாக மாறிவிடுகின்றன. முட்டைப் பெட்டிகள் போகவேண்டிய இடத்திற்குப் போனபின் பெட்டிகளைத் திறந்து பார்த்தால் முட்டைகளைக் காணுமல் பனங்கொட்டைகளைக் கண்டு திகைக்க வேண்டியிருக்கின்றது. இப்படியே மாம்பழப் பெட்டிகள் கல்லுப் பெட்டிகளாகவும், புகையிலைச் சிப்பங்கள் சருகுச் சிப்பங்களாகவும், சுருட்டுப்பெட்டிகள் மண்பெட்டிகளாகவும் மாறிவிடுக்கூடிய ஜாலவித்தைகளை யெல்லாம் ரயில்வே செய்து காண்பித்துவருகின்றது.

சிறுகதை

# வேலை நிறுத்தம்

ராதாகிருஷ்ணன்

நீதிமன்றத்திலிருந்து வந்த நேரம் முதல் அவர் மனம் அமைதியாகவில்லை. ஒரே கவலை. மேஜை மீது வைத்திருந்த 'காப்பி' பச்சைத் தண்ணீராகக் குளிர்ந்திருந்தது. அவர் முன்னால் அவருடைய இரண்டு வயதுச் சிறுமி ஏதோ மதலை வார்த்தைகள்சிந்திக்கொண்டிருந்தாள். வழக்கத்தில் தன்னைத் தூக்கி எறிந்து முத்தமிடும் தகப்பனார் அன்று தன்னை ஏறெடுத்தும் பார்க்காததைக் கண்டு குழந்தையும் வாடிய முகத்துடன் போய்த் தாயிடம் அம்மா..... அப்பா......என்று என்னவோ எல்லாம் முறையிட்டது. குழந்தையை மெதுவாக அணைத்துக்கொண்டாள் தாய்.

'காப்பி'யை அருந்திவிட்டு நடிகன் மேடையில் ஒத்திகை செய்து பார்ப்பதுபோல் ஏதோ எல்லாம் முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு, செய்! சை! என்று முணுமுணுத்தவாறே மேலும் கீழும் அவ்வறையில் நடக்கலானார் பொலிஸ் நீதிபதி ராமநாதன்.

சாயங்காலப் பத்திரிகையைச் சாளரத்தின் வழியாகப் போட்டுவிட்டுப் பத்திரிகைப் பையன் போய்விட்டான்.

பத்திரிகையை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். அதிலும் அதே புதினம் விரிவாகப் போடப்பட்டிருந்தது.

"பாதுகாப்புச் சட்டப்படி வேலை நிறுத்தஞ் செய்து கைதியாக்கப்பட்ட மூவர் இன்று 'பொலீஸ் கோர்ட்'டில் தண்டிக்கப்பட்டனர். மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிபதி திரு. ராமநாதன் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்தார்."

செய்தியை வாசித்துவிட்டு ஓர் நீண்ட பெருமூச்சுடன் பத்திரிகையைக் கீழே எறிந்தார்.

ராமநாதன் ஓர் அப்புக்காத்துவாக இருந்து நீதவானுக வந்தவர். சிவில் உத்தியோகப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று உலகமே தெரியாது தீர்ப்புக்கூறி அப்பீலில் தங்கள் தீர்ப்புத் தவிடுபொடியாகும் போக்கைப் பார்த்து பெருமூச்சு விடும் வர்க்கத்தில் அவரைச் சேர்ப்பதற்கில்லை. அவர் சட்டக் கல்லூரியிற் படிக்கும் காலத்தும், அப்புக்காத்துவாகத் தொழில் நடத்திய காலத்தும் ஓர் தீவிரவாதி. தொழிலாளர் இயக்கம், தேர்தல்கள், பொதுநலச் சங்கங்கள் எல்லாம் அவரின்றி நடைபெரு. அவருடைய எண்ணமோ பெரிசு. தம் நாட்டை ஓர் குட்டி ரஷ்யாவாகச் செய்துவிடத் தம்போன்ற சில இளைஞர்களால் மாத்திரமேமுடியும் என்று கோட்டைகட்டியவர் அவர். ஆனல் அப்புக்காத்துத் தொழிலில் அவருக்குக் கிடைத்த வரும்படி அவர் மன உற்சாகங்களையும், தீவிரவாதங்களையும் பறக்கச் செய்துவிட்டது. வாரத்தில் ஓர் கட்சிக்காரனாவது அவர் கதவைத் திறந்ததில்லை.

ஏதோ நான்கு பெரிய மனிதர்களின் தயவினாலும் சிபார்சினாலும் அவர் 'மாஜிஸ்ட்ரேட்' ஆனது பழங் 'கதை.' மூன்று வருஷங்களின் முன் நடந்த சம்பவங்கள் அவை. அதற்குள் எத்தனையோ வழக்குகளை விளங்கிவிட்டார். எத்தனையோ தீர்ப்புகள் சொல்லிவிட்டார். பட்சபாதமில்லாமல், மனச்சாட்சிக்குப் பிழையில்லாமல். ஆனல் இன்றைய வழக்கு, பாதுகாப்புச் சட்டத்தின் கொடூர கண்ணில் அவன் குற்றவாளி. ஆனல் தாரதம்மியமுள்ள பகுத்தறிவுள்ள மனிதனின் முன்......

சட்! சட்டத்தைத் திருத்த எனக்கொரு அதிகாரமுமில்லை. என்ன பேய் எண்ணம்!

ஐயோ அவன் சொன்ன பதில்!

ஐயா! நான் குற்றவாளி அல்ல. தாங்கள் என் கதையை நன்ருகக் கேட்டுவிட்டுத் தீர்ப்புக் கூறுங்கள். நான் அந்த ஸ்தாபனத்தில் இருபத்தைந்து வருடங்களாக வேலைசெய்கிறேன். தினக் கூலி அலவன்ஸ் உட்பட 1 ரூபா 61 சதம். என் மனைவி, ஆறு குழந்தைகள், வீட்டுவாடகை, துணி, மனைவி நோயாளி வைத்தியச் செலவு எல்லாமாக மாதத்தில் எனக்கு இருநூறு ரூபா உழைப்பு இருந்தாலும் போதாது ஐயா.

மற்றைய இருவரும் சொன்ன கதையும் ஏறக்குறைய இதே மாதிரித்தான். சம்பள உயர்வைக் கோரி வேலை நிறுத்தம். விளைவு 6 மாதம் கடுங்காவல். பெண்டு பிள்ளைகள் பட்டினி. மறியலால் திரும்பி என்ன செய்வது என்ற யோசனை.

என் சம்பளம் 600 ரூபாய், 'அலவன்ஸ்' முதலியன எல்லாஞ் சேர்ந்து 800 ரூபாய் கிடைக்கும். மிச்சம் பிடிப்பது குதிரைக் கொம்பு. தன் மனைவி பாயும் படுக்கையுமாக இருந்தபோது தான்செலவுசெய்த ரூபாயைஎண்ணிப்பார்த்தார் அவர். டொக்டர் பில்' உட்பட ரூபா 500.

ஏழைத் தொழிலாளி இவ்வளவு தொகைக்கு எங்கே போவது. சம்பள உயர்வு கோரியது நியாயந்தான். ஆனல் சட்டம்.

சட்டம் ஓர் கழுதை என்று ஒரு பிரபல ஆசிரியர் சொன்னது அவர் ஞாபகத்திற்கு வந்தது. என்ன செய்யலாம்.

ஐயோ அந்த மூவரின் குடும்பமும் என்ன பாடுபடுமோ அவர்கள் நிலைமை என்ன. நான் போய்ப் பார்க்கலாமோ.

அவர்கள் என்ன நினைப்பார்கள். தன் நண்பர்கள் உத்தியோகம். அந்தஸ்து. சீ இவையெல்லாம் எதற்கு, மூன்று ஏழைக் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன.

சட்டமா, நானு அல்லது உண்மையில் தொழிலாளிகளா குற்றவாளிகள். இல்லை அரசாங்கந்தான். அன்னிய அரசாங்கந்தானே நடைபெறுகிறது. நாங்கள் அடிமைகள்.

"டிறைவர்!"

"ஐயா!"

"காரைக் கொண்டுவா......... வேண்டாம்".

"ஐயா?"

"வேண்டாமென்றேன்".

"சரி ஐயா!"

வேஷ்டியுடனும் சட்டையுடனுமேபுறப்பட்டார். அவர்களின் வீட்டுவிபரம் முன்னமே முதலியார் மூலம் விசாரித்தறிந்திருந்தார். சட்டைப்பையில் அன்று வந்த சம்பளம் இருந்தது. மூன்று குடும்பங்களும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

திடீரென்று ஸ்ரீ ராமநாதன் தமது வேலையை உதறித்தள்ளிவிட்டதை அறிந்து அவர் நண்பர்கள் திகைத்தனர்! இப்போது அவர் ஓர் அப்புக்காத்து.

விசேஷ விளம்பர வசதி

எமது பத்திரிகையில் 10 போயின்ற் (10 pt.) எழுத்துக்களில் அடங்கக்கூடியதாக, 5 வரிகளுக்குக் குறையாமலும் 15 வரிகளுக்குக் கூடாமலும் பிரசுரிக்கப்படும் சிறிய விளம்பரங்கள்—தேவை, தவறவிடப்பட்ட பொருள், பிறப்பு, இறப்பு முதலியன—வரி ஒன்றுக்கு =/25 சதம் வீதம் பிரசுரிப்பதற்கு விசேஷ வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச் சலுகை ஈழகேசரிச் சந்தாதாருக்கே யுரியது.

பிரசுரத்திற்காக அனுப்பப்பெறும் எவ்விதமான விளம்பரங்களையும் மறுக்கவோ அல்லது பிரசுரித்து இடையில் நிறுத்தவோ விளம்பர அதிபருக்குரிமையுண்டு.

விளம்பரங்கள் யாவும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் காரியாலயத்திற் சேரக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

—விளம்பர அதிபர்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Jan., 6, 1946 | No. 24

## வாங்கிப் படியுங்கள்!

| | ரூ. | ச. |
|---|---|---|
| எரி நட்சத்திரம் | 4 | 50 |
| உல்லாசவேலை — எஸ். வி. வி. | 3 | 50 |
| தேவி சௌதுராணி | 2 | 00 |
| நீலமணி - கி. வா. ஜ. | 2 | 00 |
| சந்தனக் காவடி | 2 | 00 |
| வஸந்தன்—எஸ்.வி.வி. | 2 | 00 |
| புதுமாட்டுப் பெண் | 1 | 13 |
| மீராபாய் வசனம் | 1 | 00 |
| கங்கை கொண்ட சோழன் | 1 | 50 |
| பல்லவ மகேந்திர வர்மன் | 1 | 50 |
| அன்னை கஸ்தூரி | | 75 |
| சிசுபாலனம்-ராஜாஜி | | 50 |
| மீராபாய்-நாடகம் | 1 | 00 |
| மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் | 1 | 25 |
| இளமைப் பருவம் —மகாகவி. டாகுர் | 1 | 50 |
| கனிந்த வேட்கை — டாகுர் | 2 | 00 |
| வேலும் வில்லும் | 1 | 00 |
| கம்பன் மலர் | 2 | 00 |
| பாராயணத் திருப்புகழ் | | 25 |
| கரட்டூர் ராமு | 2 | 00 |
| இருமலர்கள் — பிரேம்சந்த் | 1 | 00 |
| முருகன் மதுரகீர்த்தனை | 3 | 00 |
| அமூல்யன் — சரத்சந்திரர் | 1 | 25 |
| வாடாவிளக்கு | 2 | 00 |
| ஸம்பத் — எஸ்.வி.வி. | 4 | 00 |
| சதுரங்கம் — மகாகவி டாகுர் | 1 | 75 |
| குழந்தை மனம் | 2 | 13 |
| இரு துருவங்கள் — காண்டேகர் | 5 | 50 |
| ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம் —R. C. தத். I. C. S. | 4 | 50 |
| காதலர் உள்ளம் — எம். எஸ். சபரிராஜன் | 1 | 75 |
| காவேரி—ராய. சொ. | 1 | 00 |
| கதைக்கனிகள் — ஆண்டர்ஸன் | 1 | 00 |
| மிருணாலவதி — கே. எம். முன்ஷி | 3 | 00 |
| ஏழு நாடகங்கள் — க. நா. சு. | 2 | 00 |
| சுதந்திரத்தின் தத்துவங்கள்—மாக்ஸ்வினி | 2 | 00 |
| போதனைக்கருவிமொழி— ஸ்ரீமந் நா அகர்வால் | 1 | 00 |
| அடிமைத்தாய் — ஜோஷி | | 50 |
| பேஜிஸ்ட் ஜடாமுனி சொ. விருத்தாசலம் | 1 | 50 |
| புதுமைப்பித்தன்கதைகள் (ராப்பர்) | 3 | 25 |
| ஆங்கிலக் கவிதை மலர்கள் (ராப்பர்) | 1 | 50 |
| திரிபுரி காங்கிரஸ் — கா. கணேசன் | | 38 |
| ஸ்டாலின் - பி. வி. சுப்பிரமணியம் | 1 | 50 |
| மின்சாரத்தின் விந்தை பெ. நா. அப்புசாமி | 2 | 50 |
| பாதுகா பட்டாபிஷேகம் — தொ. மு. பா. | 1 | 00 |

தபாற்செலவு:

| | |
|---|---|
| தனிப்பிரதிக்கு — | 25 |
| அடுத்த ஒவ்வொரு பிரதிக்கும் — | 10 |

வி. பி. பியில் அனுப்பமுடியாது.

**S.S. சண்முகநாதன் & சன்ஸ்**
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

# இசையின் முதன்மை நாதம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது கோயில் எப்படிப் பெரிதுங் கொள்ளப்படுகிறது? மக்கள் மனோநிலை மாறியது. கலைக்கண்ணும் இசைச் செவியும் உலுத்தன. கண்ணையும், செவியையும் புதுக்கல் வேண்டும். அவைகளை மடங்கள் புதுக்குமா? பல்கலைக் கழகங்கள் புதுக்குமா? அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் புதுக்குமா? தமிழிசை இயக்கம் புதுக்குவதாக.

கோயில்களில் ஆடல்பாடல் நிகழுமாறு பலமுறைகள் கலைஞானிகளாற் கோலப்பட்டன. அம்முறைகளின் கதி என்னவாயிற்று. அந்தோ! ஆடல் அழுகியது; பாடல் பாழாயிற்று. ஆடலும் பாடலும் வெறுங் களியாட்டல்ல. அவை செந்நெறி கூட்டவல்லன. இவ் வுட்கிடக்கையைப் பொதுவாகத் தமிழ் மறைகளிலும், சிறப்பாகத் திருஞானசம்பந்தர் தமிழ் மறையிலுங் காணலாம். திருஞானசம்பந்தரை முத்தமிழ்க் கண்கொண்டு நோக்குதல் வேண்டும்; வேறு கண்கொண்டு நோக்கினுல் அவர்தம் உள்ளம் எளிதிற் புலனுகாது.

திருஞானசம்பந்தர், இறைவனை, இயல்-இசை-நாடகமாக்கித் தமிழில் தந்த பெரியார். அவர் தமிழ்த்தோன்றல்-முத்தமிழ் விரகர். உள்ளத்தில் இறைமையும், வாயில் பண்ணும், கையில் தாளமும், காலில் நடமுங் கொண்ட ஓர் இசைக் கலை திருஞானசம்பந்தம். அக்கலை அறிவுறுத்திய ஆடலும் பாடலுங் கொண்ட இசைநெறி செந்நெறிக்கு மாறுபட்டதென்று சமயவாதிகள் நினைக்குங் காலமுந் தோன்றியுள்ளது! வெட்கம்! வெட்கம்!

பண்மயமான தெய்வத் திவ்வியப் பிரபந்தம் கோயில்களில் எம்முறையில் ஓதப்படுகிறது? கொலை - கொலை - இசைக் கொலை கோயில்களில் நடைபெறுகிறது! கலைநாடு கொலைநாடாகியது. இசைநாடு வசைநாடாகியது. கோயில் பழையபடி கலைக்கூடமாக-இசைக் கழகமாக - தமிழிசைச் சங்கத்தார் உழைப்பரென்று நாடு எதிர்பார்க்கிறது.

தமிழ்மறை ஓதுவோர் இசை பயில்வது நலம். தமிழிசைச் சங்கத்தார் வலிந்தேனும் அவர்க்கு இசைபோதிக்க முந்துவது சிறப்பு.

இக்காலச் சங்கீத வித்துவான்களிற் பலர் 'தமிழ்மறை ஏழிசைக்கு முற்றும் ஒத்து வாராது, என்று ஒதுங்குகின்றனர். இவ்வொதுக்கம் இசையை ஒதுக்குவதாகும்.

தமிழ்மறை இசைக் களஞ்சியம். இவ்வுண்மை உழைப்பால் விளங்கும். காலஞ்சென்ற இசைஞாயிறு - காஞ்சி - சுப்பிரமணியம்பிள்ளை (நயினு பிள்ளை) உள்ளிட்ட இசைப்புலவோர் தமிழ்மறைகளை இசைபடப் பாடிக்காட்டியது எனது நினைவிலுறுகிறது. சங்கீத வித்துவான்களைத் தமிழ்மறைமீது கருத்துச் செலுத்துமாறு அன்பால் அவர்களை முடுக்கியேனும் தமிழிசைக் கழகத்தார் தொண்டாற்றுதல் அறம்.

இசை யாண்டுங் கலந்தும் தனித்தும்இயங்கும்இயல்புடையது என்று முன்னேகுறிப்பிட்டேன். அதை ஈண்டு மீண்டும் நினைப்பூட்டுகிறேன். அரங்கில் பல்லியங்களுடன் முகடு முட்ட வாய் திறந்து வீறிடுவது மட்டும் இசையாகாது. இசை விரிந்த பொருளுடையது.

இசை எங்கணும் பரந்து நிற்பது. இறை இசை; இயற்கை இசை; இயற்கைக் கூறுகள் இசை; காவிய ஓவியங்கள் இசை; எல்லாம் இசை: யாவும் இசை. எங்கணும் இசை யின்பத்தைப் பருகுவோனே புலவன்; இசைப் புலவன்; அவனே ஞானி; மெய்ஞ்ஞானி.

எங்கணும் இசையைப் பருகும் புலமை பெறுதற்குரிய வழி என்ன? துறை என்ன? பல வழிகளுண்டு; பல துறைகள் உண்டு. ஈண்டு ஒன்றைச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். அஃது ஓவியம்.

'ஊமை ஓவியமா எங்கணுமுள்ள இசையைஉணர்த்தும்? நன்று! நன்று!' என்று எள்ளி நகையாடுவோரும் இருப்பர். அவ்வெள்ளலையும் நகையையும் மாற்றவேண்டுவது தமிழிசைச் சங்கத்தின் கடமைகளுள் ஒன்று.

ஓவியம் ஊமையா? ஓவியத்தை ஊமையென்று கருதுவோர் கண்ணுள்ள குருடராவர்; காதுள்ள செவிடராவர்; நாவுள்ள ஊமையராவர். ஓவியம் ஊமையன்று, அது பேசாமற் பேசுவது. அப் பேச்சின் பொருளுணர்வோன் கலைஞுனவன்; இசைக் கலைஞுனவன்.!

ஓவியம் ஒரு பெரும் ஆசிரியன். ஓவியம் பள்ளியிற் பயிலப் பயில நமது பேச்சு அடங்கும்; ஓவிய இசை கேட்கும்: ஓவியம் நம்மை ஊமையாக்கும். விரிவஞ்சி இவ்வளவில் நின்று மேற்செல்கிறேன்.

இசைப் புலமைக்கு ஓவிய உணர்வு இன்றியமையாதது. ஓவிய உணர்வு பெருகப் பெருக இசைப் புலமையும் உடன்உடன் பெருகிக்கொண்டே போகும். நாளடைவில் ஓவியம் இசையைப் பொழிதல் புலனுகும். ஓவிய இசை ஒழுக்கை என்னென்று புகல்வேன்! அருகரின் அருள் ஓவியத்தையும், புத்தரின் அற ஓவியத்தையும் கண்ணனின் குழல் ஓவியத்தையும், கிறிஸ்துவின் சிலுவை ஓவியத்தையும், தட்சணு மூர்த்தியின் மோன ஓவியத்தையும் நோக்குவோம்; உற்று நோக்குவோம்; முன்னுவோம். என்னே இசைப்பொழிவு! இசைப் பெருக்கு! இசை அமுதம்!

கீர்த்தனை தமிழ்நாட்டில் கால்வைத்ததும், அதற்கு வரவேற்பு நல்கப்பட்டது. தமிழிற் கீர்த்தனைகள் யாக்கப்பட்டன. அந்நாளிற் பெரும் பெரும் சிங்க ஏறுகள் இருந்தன. முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார் அருணுசலக் கவிராயர் முதலியோர் பெரும் பெரும் சிங்க ஏறுகள் அல்லவோ? அவர்களால் யாக்கப்பட்ட கீர்த்தனைகளிற் பொருளும் இசையும் செறியலாயின.

இந்நாளில் அரிகளின் தொகை சுருங்கியது, நரிகளின் தொகை பெருகியது. கலைஞரல்லாதாரும் கீர்த்தனைகளை எளிதில் எழுதுகின்றனர் அவைகள் ஏழிசையால் அணி செய்யப் படுகின்றன. அவ்வணியைத் தாங்கல் அவைகளால் இயலவில்லை, கலையற்ற கீர்த்தனைகளின் ஒலி, காதின் தோலிற் சிறிது நேரம் நின்று அரங்கம் கலைந்ததும் சிதறிவிடுகிறது. இதுவோ இசைப் பாட்டின் முடிவு?

இசைப்பாட்டு இயற்கையில் எற்றுக்கு அமைந்தது? புலன்களின் புறத்தளவில் நின்று பொன்றுதற்கா அஃது அமைந்தது? இல்லை. புலன்களின் வழியே புகுந்து, கோளுக்குரிய புறமனத்தை வீழ்த்திக் குணத்துக்குரிய அகக்கண்ணைத் திறந்து, அமைதி இன்பத்தை நிலைபெறுத்துதற்கென்று இசைப்பாட்டு இயற்கையில் அமைந்தது. இஃது இசைப் பாட்டின் உள்ளக்கிடக்கை. இதற்கு மாறுபட்டது இசைப்பாட்டாகாது.

கலையற்ற சிறுமைக் கீர்த்தனைகளால் இசைக்கே இழுக்கு நேர்ந்தது. இவ் விழுக்கைப் போக்க இசைப்புலவோர் தெய்வக் கலைஞரின் இசைப் பாக்களுடன் உறவு கொள்வாராக. அவர் உறவு கொள்ளத் தமிழிசை இயக்கத்தின் துணையுந் தேவை.

இசைவழியே தமிழ்ப் பாக்களைப் போதிப்பது மரபு. இம் மரபு இதுகாலை வீழ்ந்துபட்டு வருகிறது. மரபைக் காக்க வேண்டுவது தமிழ் ஆசிரியன்மார் கடமை. இக்காலத் தமிழ் ஆசிரியன்மார் சிலர் பாக்களைப் பாடி உரைகூற நாணுகின்றனர். சிலர் தமக்கு இசைஞானமில்லையே யென்று வருந்துகின்றனர். நாணமும் வருத்தமும் மரபை அழிக்குமே. பின்னே கண்ணீர் உகுப்பதால் என்ன பயன்?

பிறவியில் இசையற்ற தோன்றில்லை என்பது அறிஞர் கொள்கை. அமைப்பில் சில வேற்றுமைகள் உறலாம். நல்லிசைப் புலமை சிலர்க்கு வாய்க்கும்; சிலர்க்கு வாய்ப்பதில்லை. எல்லார்க்கும் நாதசுரம் அமையுமா? சிலர்க்குக் காகசுரமும் அமையும். கழுதைக் குரலிலும் ஒருவித இசையுண்டு என்று புலவர்க்கு விளக்கவேண்டுவதில்லை. ஆகலின், எச்சுரத்தாலாதல் - எக்குரலாலாதல் - பாக்களைப் பாடிப் பொருள் கூறுமாறு தமிழ் ஆசிரியன்மாரை வேண்டுகிறேன்.

சமீபத்தில் நிகழ்ந்த சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் மூன்ரும் ஆண்டுவிழாவில் திரு. வி. க. அவர்கள் நிகழ்த்திய திறப்பு மொழி.

## ORDER NISI

*In the District Court of Jaffna*

In the matter of the Last Will of the late Kanaganayagiammal wife of M. Rasanayagam of Tellippalai East

*Deceased*

*Testamentary Jurisdiction* No. 501

Rasammah widow of Kanagasundaram of Tellippalai East

*Petitioner*

*Vs.*

1. Kanagasundaram Rasanayagam
2. Kanagasundaram Singanayagam both of Chunnakam

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire District Judge Jaffna on the 30th. day of November 1945 in the presence of Mr. T. Kumaraswamy Proctor on the part of the petitioner and on reading the affidavit and petition of the petitioner.

It is ordered that the Last Will of the abovenamed deceased dated 18th. August 1945 and deposited in Court be declared proved and the petitioner be declared entitled to probate of the same and that the same be issued to her accordingly unless the abovenamed respondents or any other person shall on or before the 18th. day of January 1946 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 14th. day of December 1945

(*Sgd.*) A. V. Kulasingam
Acting District Judge

(2597-ii)

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 3435700. 00ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விப[illegible]

S. [illegible]
சிரூப்பர்

(2584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SAMUEL SONS & Co., Ltd.,
*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

- இரும்பு: கம்பிகள், கேடர்கள், சிலாகைகள், அச்சுகள், தகடுகள்
- நீர் இறைக்கும் யந்திரங்கள், குழாய்கள், தாங்கிகள்
- கல்வனைஸ்: தகடுகள், தாங்கிகள், வாளிகள்
- கைத்தொழிற்குரிய ஆயுதங்கள் மற்றும் கமத்தொழிற் கருவிகளும்
- பித்தளை: தகடுகள், பூட்டுகள், பிணைச்சல்கள்
- மைவகைகள்: மை எண்ணெய், வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்**
ஆஸ்பத்திரி ரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2590]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள்நிலையம் நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜனவரி 6 உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுவெளியிடப்பெற்றது.